இந்தியாவில் கோவில்கள் வியாபார நிலையங்களாகி வெகு நாட்களாகி விட்டன. திருப்பதியிலேதான் அதிகவருமானம் என்பதால் திருப்பதியை தமிழ்நாடு மாநிலம் எடுப்பதா? ஆந்திரா மாநிலம் எடுப்பதா ? என்ற கொள்கை அளவான போட்டிகள் இன்னும் நிலவுகின்றன. இத்தகைய நிலையில் எமது சமயநிலை காணப்படுகிறது. ஆலயங்கள் 'ஆ' என்ற ஆத்மாவை லயிக்கச் செய்கின்ற இடங்கள் என்பதற்கு மாறாக ஆத்மாவை அலைக்கழிக்கும் இடங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. இவை தடுத்து நிறுத்தப்போட வேண்டும் என்பதை யார் சிந்திக்கிறார்கள்? கோவில்களுக்குப் போய் கொடிய பிணியகற்றும் நிலை இன்று இல்லை. கோவில்கள் கொடிய பிணிதேடும் நிலையங்களாக உருவாகி வருகிறது என்பதைக் கண்டும் கேட்பாரற்ற நிலை நாதியற்ற நிலையல்லவா?

விண்வெளி ஆராய்வுகள் நடைபெறுகின்றன. ஆம்ஸ்ரொங்கைப் பற்றிப் பாட்டுப்பாடி ஓடிவிளையாடும் நிலையில் நாம் இருக்கிறோம். எவ்வளவு கேவலம்? எமது இலக்கியங்களிலே புவியின் மேல் ஏழு உலகம், கீழ் ஏழு உலகம் என்று பதினான்கு உலகங்களையும் கட்டியாண்டவன் என்று பதினான்கு உலகம் பற்றிப் பேசப்படுகிறதே. இன்று 9 கோள்களை மட்டும்தான் கண்டுபிடித்து இருக்கிறது நவீன விஞ்ஞானம். ஆனால் எமது பண்டைப் பெருமை மிகு மதமோ பதினான்கு கோள்களைபற்றிச் சொல்லியுள்ளது. இதை ஆராய எமக்கு ஒரு 'நாசா' தேவையில்லையா?

ஆயுதங்களை உற்பத்தி செய்தலிலும் விற்பனை செய்தலிலும் அமைதியான நாடுகளில் யுத்தங்களைத்தூண்டி அணுவாயுத வாய்க்குள் உலகத்தைக் கொண்டு வந்திருக்கும் அமெரிக்கா உலகப் பொலிஸ்காரன், எனவும் சண்டித்தனக்காரன் எனவும் குறிப்பிட்டு எழுதி கேட்கும் நாடுகளான நாங்கள் சைவர்களாக இருந்தபோது உலகுக்கே போரின் வடிவங்களைக் கற்றுக் கொடுத்தவர்கள், போர்வியூகம், போர்முறை, போர்நீதி என்பன எல்லாம் எமக்கு சொந்தமானவை. நாகக்கணை என்பது பற்றி மகாபாரதத்திலே பேசப்படுகிறது. குறிப்பிட்ட இலக்கை தாக்கும் அன்றேல், மீண்டும் வந்து ஏவிய இடத்தில் நிலை கொள்ளும். மிகச்சக்தி வாய்ந்தது. கர்ணன் என்ற மாவீரனிடம் அது இருந்தது. இந்த நாகக்கணையைத்தான் அமெரிக்கா இப்போது ஆராய்கிறது. அதன் பாதி ஆய்வுதான் வெற்றியடைந்துள்ளது. குறிப்பிட்ட இலக்கை நோக்கி ஏவின் இலக்குப்பிழைத்தால் தன் இலக்குப்பிழைத்ததை கணனி அறைக்கு அறிவிக்கும் நிலை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. மீண்டும் விட்ட இடத்திற்கு திரும்பவரும் முறை ஆய்வு செய்யப்படுகிறது. எமது தாய்நாடுகளில் இருந்து திருடிச்சென்ற சூத்திரங்கள் (Formula) இன்று மேலைத்தேய நாகரிகத்தின் சொந்தங்களாக மாறிவருகிறது. நாம் கையில் இருந்ததை விட்டுவிட்டு இப்போ எங்கிருந்தோ வரும் கண்டுபிடிப்புக்களை வாயாரப் புகழும் விற்பன்னர்களாகி விட்டோம்.

எமது மதங்கள் கட்டுப்பாட்டோடு இருந்தன. சைவன் என்றால் நேர்மையானவன் , நீதியானவன், ஒழுக்கமானவன், வஞ்சகமற்றவன், துன்பமில்லாதவன். இந்நிலமை இல்லாது போயிற்று. எம்மிடம் உள்ள தூயகுணங்களும் இல்லாது போகப் போக எமது நிலை படிப்படியாக சீர்குலைந்து செல்கிறது. இவை சீர்திருத்தப்பட வேண்டும். எமக்கு என்றொரு சிறந்த கலாசாரப்பண்பாட்டு விழுமியங்களைத் தந்த சைவநீதியை மீண்டும் பொலிவுறச் செய்தல் இன்றைய இளம் தலைமுறைக்கு விடப்பட்டு இருக்கும். சவாலாகக் கொண்டு செயலாற்றுங்கள்.

*With Best Compliments From*

**The Battery that moves the Nation**

**Lucas**

**KLEVENBERG (PVT) LTD.**

Tel : 572106/7/8, 572960/1/2

Sole agents for

**Lucas**

The good life battery

*With Best Compliments From*

# EXPRESS NEWSPAPERS (CEYLON) LTD.

Established 1930

***Publishers of***

VIRAKESARI DAILY

வீரகேசரி

VIRAKESARI ILLUSTRATED WEEKLY

வார வெளியீடு வீரகேசரி

The most popular Tamil Newspapers in Sri Lanka together with

**MITHRAN VARAMALAR**

மித்திரன் வாரமலர்

Weekend EXPRESS

**Publications with the most advertising potential**

**Contact Nos:**

**General : 320881 - 3, 323841, 439985-6**

**Chief Editor - Virakesari : 320927**

**Chief Editor - Weekend Express : 439984**

**Circulation / Advt. Manager : 327827**

**Fax : 448205**

**185, Grandpass Road, Colombo 14.**

*With Best Compliments From*


# A.M.T. TRANSPORT SERVICE

EXPORTERS, IMPORTERS, GOVERNMENT TRANSPORT CONTRACTORS, CUSTOMS CLEARING & FORWARDING AGENTS

**Office : 102/4, Wolfendhal Street, Colombo 13.**

**Telephone Off: 433391 , 334976 Res : 585690 Fax: 342138**

# ORGANIZING COMMITTEE - 1998



**Seated L.R** : R. Brammavinayagan (Editor) , N. Arul Prasanth (Sub - Editor) , R. Rathisan ( Sub - Editor ), T. Saruana (Asst. Student Chairman), T. Sudarshan (Student Chairman), R. Anundan (Secretary), B. Vasantha Krishnan (Asst. Sectetary), R. Pranavan (Treasurer ), K. Mayuran (Asst. Treasurer), S.Kirubananthan (Sub - Editor)

**Standing ( 1st Row) L-R** : U.L.A. Saffan, V. Vimalathithan, J.Nitharshan, N. Neshanthanan, S. Arunan, V. Vinoth, L. Mohanadas.

**Standing (2nd Row) L-R** : K. Ravishankar, M.S.M. Shiraz, L. Gopikanthan, V.S.S. Sivaruben, A.R.Rickaz, T. Yogendran, N.Shangeeth kanna, S. Karthick.

**Standing (3rd Row) L-R** : T.M. Shaphiq, N. Dhanesh, S.Rajiv Prasanna, S. Rukman, M. Srirangan, S. Kailainathan, S. Mayuran.

**Standing (4nd Row) L-R** : V. Kirupakaran, P.S.Senthuran, S. Kajendran, G. Vishnukanth, S. Senthuran, M. Sanjeeharan.

*With Best Compliments From*

# ARTHUR TOURS

**AIRPORT AND ISLANDWIDE TRANSPORT SERVICE**

184, Galle Road,
Wellawatte,
Colombo - 06.

Office T. P: 582978, 593926 Fax: 593926
074-516666, 074 - 512424
Resi T. P: 502617, 585376, 502882

**WITH BEST COMPLIMENTS FROM**

# TALKWELL COMMUNICATION & TRAVELS

Fax, I.D.D & Local Calls

No. 379/1 Galle Road,
Colombo - 01

*With Best Compliments From*

# FARMERS STORES

**K.K.S Road, Chunnakam, Jaffna.**

***Branch***

**Palaly Road, Thirunelvely, Jaffna.**

Distributors for BASF - Finlay (Pvt) Ltd. and
Exotic Foliage Company (Pvt) Ltd.

Well Wishes

From

MR. K. RAGULAN

*With Best Compliments From*

# JANANY
## JEWELLERY MARTS

**177 1/12 DEVI COMPLEX,**
**1 ST FLOOR,**
**SEA STREET - COLOMBO - 11.**

334940

*With Best Compliments From*

# SAMAN CAFE

**74, KOTMALE ROAD,**
**NAWALAPITIYA.**

# SHANTHY CAFE

**94, KOTMALE ROAD,**
**NAWALAPITIYA.**

*With Best Compliments From*

## V. K. RAJARATNUM,



**95, Stanly Road,**
**Jaffna.**
**Tel : 021-2056**

**WITH BEST COMPLIMENTS FROM**

# FLORRANCE

Dealers in Textiles Readymade Garments.

**112/13A Velona Super Market**
**Keyzar Street, Colombo - 11.**
**Tel:01-541622, 01-345478**

# எழுச்சியா ?... இல்லை தொடர்ச்சியா ?...

அந்தி சாய்ந்தது.
சாய்ந்ததும்,
உண்டியானது தொப்பையை நிறைக்க,
நிறைந்ததும் நிறைந்ததகல
மிண்டி நடையிட்டு
''பல்கனி'' சென்றேன்.
காற்று வாங்க,

சென்றதும் உணர்ந்தேன் .
காற்று வாங்க வந்தவனுக்கு
காற்றில்லை என்று,
என்றதும் திகைத்தேன்.
திகைத்ததால் நிமிர்ந்தேன்.
நிமிர்ந்ததால்,
மீண்டும் திகைத்தேன்.
காரணம்,
அமாவாசை அல்ல அன்று.
ஆனாலும்,
நிலவில்லை அந்த வானில்.

வானின் நிலை கண்டு
திரும்பினேன்,
நிலை குலைந்து
திரும்பியதும் உணர்ந்து கொண்டேன்
நிலவும் ஒளியிழந்தது,
அவர் முகவொளியால் என்று.
காறறும் நிலையானது,
அவர்தம் மூச்சிரைப்பால் என்று
இத்தனையும் நடக்க
நீவீர் ,
''யார் அவர் ?'' என்று கேட்பீர
நானவனும் அதனையே
கேட்க,
கேட்டதும்,
மன்மதன் அழகினில் ஒப்பான்,
திறன் கொள் தோளுடையான்,
நல் உரைக்கும் நாக் கொண்டான்.
செப்பினான் தன் பெயரை,
செப்பியதைக் கேட்டதும்
நான்,
சிரித்தே விட்டேன்
காரணம்
அவர் கூறியது
''இராவணன்'' என்று.
நெற்றியிலே நீற்றுப்பட்டை
கொண்டோரெல்லாம்

சிவ பக்தரே!
சிவபக்தரேயாயினும்,
அவர் தமை இராவணனுக்கு
ஒப்புவது தகுமோ!
இல்லை, நீரெனைக் 'கேடயன்'
என்று நினைத்தீரோ!
மாண்டார் மீண்டும்
எழுவதில்லை.
எனும் தருமம் யானறியேன்
என மனப்பாடம் கொண்டீரோ!
நான் கம்பனை, வான்மீகியை
அறியாதவன் என்று நினைத்தீரோ!
அங்கு உயிர்த்தவன் இலக்குவனனே
இராவணன் இறுதியில் இறந்ததை நன்கறிந்தே
றோயல் நவரங்கஹலவில்,
நான் .....
இராவணனாய் நடித்த
கதைதான் தெரியாதோ ?
விளம்பினேன்.

விளம்பியதைக் கேட்டதும்,
இடியினை ஒப்பதோர்
சிரிப்பினை விட்டு,
'மட்டிப்பயலே !
எட்டி,
மொட்டையிலே குட்டி விடுவேன்!
மார்க் கண்டேயன் சரிதம் தனை
அறியாயோ!
சிவனடியை யமன்
அண்டமாட்டான்.
எனும்,
சிவ தர்மம் தெரியாதோ?
என் தலையொன்று,
உயிருடன்,
கையிலாய மலையிலே,
சிவனவன் காலடியில்,
உள்ள கதையது உனக்கு தெரியாதோ!'
என,
என் விளம்பலுக்கு
விளக்கம் கொடுப்பினும்,
குள்ள மனம் படைத்த
என் குணம் கண்டு
மேலும் விளக்கினான்.
விளம்பினான்,
சிவபக்தன் யான் அழிவேனோ ?
சூரபன்மன் பெற்ற

அழியா வரம் போல,
கயமுகாசுரன் பெற்ற
நித்திய நிலை போல,
இராவணன் யான் பெற்ற
நிரந்தர வரம் பற்றி தான் அறியாயோ !
பிரம்மாவின் வழிபிறந்து .
உருந்திரன் அருள் கிடைத்து
விஷ்ணுவின் வாக்கின்படி
தேவர் கணக்கில் நேற்றை யுகம் கடந்து
இன்று யுகம் மீண்டேன்
என்றவன் அருள்வளம் கேட்டு
இது இராவணன் எழுச்சியா !
இல்லை தொடர்ச்சியா என
குழம்பி நின்றேன்.
குழம்பியவன்
குழம்பியபடி,
கரிய தோர் உருவம் கொண்ட
இராவணனை நோக்கி,
நெஞ்சிலே – – –
நெடுநாளாய் இருந்த
குழப்பமொன்றைக் கேட்டேன்
''மெல்ல சைவமினி சாகுமோ?
இல்லை செல்வ சிவநெறி தான்
தேய்வுறுமோ''
என என் மனதின்கண்
கொண்ட
குழப்பம் கண்டு,
விளக்கம் கொடுத்தான்.
''அஞ்சேல் இளவலே
ஆதியும் அந்தமுமில்லா
அருள் நெறியீது.
சிவனினால் ஆக்கபட்ட
சிவ நெறியிது''
சிந்தையிலும் செயலிலும்
சிவனைக் கொண்டோர்
எனைப் போல் பலர் உளர்
பலர் உளர்,
இயக்கர் கோன்.
இயம்பிய பதிலினைக் கேட்டு
தளம்பிய என்மனத்து
தளம்பல் குறைந்து
விளம்பிய இராவணன் நோக்கி,
அப்படியாயின்
சைவர் தாம் இந்நிலைக்கு
காரணமென்ன?
அடுத்த வினாவினை
விடுத்தேன்.
வினாவினைக் கேட்டதும்
சில,
வினாடிகள் பொறுத்து
விடைதனைக் கொடுத்தான்
''சுகங்கள் பல பெற்றதும்
மனிதன்,
போகப் பொருளாய்
கடவுளை மாற்றினான்.
பணம் பண்ணும் கூடமாய்
இறைகூடத்தை மாற்றினான்
நிதம் நிதம் அடிக்கும்
''லூட்டியின் சென்டராய்''
கோயிலை மாற்றினான்
சிவனை மறந்தான்
சித்தத்தை தொலைத்தான்
அதனால் தான்''
என
இலங்காபுரி வேந்தன்
திராவிடமைந்தன்
இயம்பிய பதிலினைக்
கேட்டு,
வீமோசனம் யாதென
விளம்பினேன்,
கவலை விலக்குக
இளவலே,
ஆயிரம் ஆயிரம் தொல்லை
கண்டு,
மீண்டும்
மனிதனவன் சித்தமானது
சிவத்தினை நோக்கிறது
அவள் பண்ணிய பாவம்
கலைந்து,
தொலைந்த பின்
மீண்டும்
பண்டைய வரப்படி
இன்றைய நிலைப்படி
நான் வருகிறேன்
வருவேன்
இலங்கா புரியை
மீட்டெடுக்கிறேன்
துலங்குவேன் என்றென்றும்
என்றியம்பி மறைந்தான்
இயக்கர் கோன்
இது – – –
இயக்கர் கோன் காதையின்
எழுச்சியா? – – –
இல்லை, தொடர்ச்சியா?

இ. பிரம்ம விநாயகன்
உயிரியல் பிரவு
உயர்தரம் 99

*With Best Compliments From*

# CHATHAM TRAVELS (PVT) LTD.

(MEMBERS OF HIRDARAMANI GROUP)

**No. 69, Chatham Street,**
**Colombo - 01.**
**Tel : 438463, 325456**

*With Best Compliments From*

# Sivath Trade Centre

No. 6, Wolfendhal Street,
Colombo - 13.
Tel : 449139

*With Best Compliments From*



***JANANEI TRADE CENTRE***

WITH BEST COMPLIMENTS FROM

# SARAVANAS

Dealers in:
Groceries & Indian Goods Etc

157/3, Sri Kathiresan Street,
Colombo - 13.
Phone : 449092.

*With Best Compliments From*

# ANCHOR STEELS

Importers, Plywood &
General Hardware Merchants

329, Old Moor Street,
Colombo - 12.
424226

*With Best Compliments From*

# COLONIAL HARDWARE STORES

Importers, Distributors & General Hardware Merchants

427, Old Moor Street, Colombo - 12.
Tel : 431950, 435414, 347981, 347983, 347989, 424562, 321144,
075-330778, 075-330768
Fax : 334090 , E mail :Colonial @ slt.lk

Branch :
138, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.
Tel : 334197, 074-710201, 074 - 610545, 074 - 610302
Fax : 074 - 610260

# படி! படி!

அதிகாலை எழுந்து அயராது படி
ஆயகலைகள் ஆராய்ந்து படி
நெஞ்சில் வந்து இருக்கும்படி
நன்றாய் இருந்து நல்லறம் படி

பண்பை வளர்ப்பது முதற் படி
பின் பாசத்தை வளர்ப்பது அடுத்தபடி
சிவமாய் வாழ சைவத்தை படி
சிவத்தை உணர்வது சிறந்தபடி

சமயத்தை சரிவர விளங்கிப் படி
அன்பே சமயத்தின் முதற் படி
சான்றோர் காட்டிய வழியின் படி
சமயமே நம்மை உயர்த்தும் படி

நிஷாந்தனன் நீலலோஜனன்
ஆண்டு – 8Q

With

Best

Compliments

From



**R. Pranavan** (99 Bio)

*With Best Compliments From*

# AMBIHA

**Fancy Emporium**

DEALERS IN COSTUME JEWELLERY COSMETICS,
THREADS, BABY NEEDS AND FANCY GOODS ETC.

NO. 216 C, MAIN STREET,
COLOMBO - 11.
☏ 421759.

செழுந் தமிழ் மாணவர்களே !

அன்று .....

இயல், இசை, நாடகமென

முத்தமிழுக்கு முடிசூட்டினீர்கள்

இன்று.....

கலைமகளுக்கு மணியாரம் சூட்ட

கலை விழா காணுகிறீர்கள்

உங்கள்....

ஆற்றல் கண்டு மகிழ்கின்றேன்

ஆனந்தமாய் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,

க. கலாகரன் B.B.A(Hons) Dip.In. Edu

(பொருளியல் ஆசிரியர்)


*With Best Compliments From*

TATA SHOE COMPANY (PVT) LIMITED



109/1, Messenger Street,
Colombo -12.

334813, 336053.

# சக்தியே எமை சமைத்தது காண்!

தில்லை நடம்புரி நடராஜனவன் துணைவியாம்
இறைவியவள் சக்திக்கெல்லாம்
முன்னம் நீபுரி திருவிளையாடல் பயன் பிரமன் உதிக்க,
அன்னவன் பிரமிக்கும் உலகையே சமைத்திட்டான்!

❋❋❋

சக்தியே சர்வலோகங்கள் எல்லாம் நீ செதுக்கிய சிற்பங்கள்
சிற்பங்களுக்கு அழகு சேர்க்கும் மாலைகளாக
சித்திரப்பதுமை நீ மானிடரெம்மைப் படைத்திட்டாய்!
மறதியால் செய்த செயலொன்று நீ உணரவில்லை போலும்!

❋❋❋

கறுப்பர் என்றும் வெள்ளையர் என்றும்
உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்றும்
உன் படைப்பில் தான் எத்தனை வேறுபாடுகள்!
சர்வநாயகி நீ படைப்பில் வேறுபாடு காட்டினால்
மனிதன் தன் பண்பிலேயே வேறுபாடு காட்டுகிறான்.

❋❋❋

சாதிவெறி என்ற போதை தலைக்கேறி
தன்நிலைதான் மறக்கின்றான் இன்னல்கள்
பலவும் கொடுக்கின்றான் இறுதியில்
இறந்தும் விடுகிறான்
சிந்தித்தேன், எல்லாமே உன் படைப்பின்
வேறுபாட்டால் விளைந்த வினைகளம்மா!

❋❋❋

இயற்கை வளங்களின் இன்றைய நிலை அழிவு!
நீ சிருஷ்டித்த மனிதப் பிராணியே காரணம் அந்நிலைக்கு
ஆதியில் மனிதர், ஆதிபரா சக்தியுன்னை
அகத்துள் கொண்டார், மகிழ்வாய் வாழ்ந்தார்
மனநிறைவடைந்தார். ஆசையால் வடுவடையாத
உள்ளங்கொண்ட மனிதர்கள் அவர்கள்!

❋❋❋

இன்று இடியென துன்பங்கண்டாலும் தம்
இயலாமையை தெரிந்தபின்புதான் உனை
நினைக்கிறான் மனிதன், ''யாதும் நீயம்மா'' ।
இனியாது செய்வது என கூறம்மா என்று குழறுகிறான்.
மனிதன் ஒரு பச்சோந்தி என்று கண்டு கொண்டாயா?

❋❋❋

அன்றெம்மவர் ஊர்களில் சுகமாய், சுதந்திரமாய்
சுற்றம்புடை சூழ சூன்ய வாழ்வில் ஓர்
சுடர் விளக்காய் வாழ்ந்திருந்தோம்
இன்றன்னியர் தேசத்தில், அடுத்தவர் தயவில்
யாவும் அற்றவர் போல் வாழ்வதை
நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையம்மா ।

❋❋❋

பீரங்கிகள் முழங்க பிணங்கள் மலியும்
பிண உலகம் அம்மா இது, பக்தியுலகம் அல்ல ।
பாவப்பட்ட ஜன்மங்கள் நாமிங்கு நடுத்தெருவில்,
நாயாய் அலைகின்றோம்.
சந்தி சிரிக்கின்றது எமை நாயென்று
சந்ததி சொல்கின்றது கௌரவமாய் வாழ்ந்தவன் இவனென்று
ஓர் உடலில் ஈர்நிலையாய் எம்மால்
வாழமுடியவில்லை தாயே ।
வந்து எமை பாராய் ।

❋❋❋

சக்தியே எம்மைச் சமைத்தது காண் ।
எமது சந்ததியின் பின்னணி காண்
சண்டாளர்களால் நசுக்கப்பட்ட நிலை காண்
யாவும் பழைய நிலைதனில் மீண்டும் பாதம்
பதிவதற்கும் ஒரு வழி காண்
வழி கண்டுவிட்டு மீண்டும் உலகைப் பார்
நிம்மதி நிச்சயம் உண்டு.

S. சாந்தருபன்
கணிதப் பிரிவு
உயர்தரம் 99

*With Best Compliments From*

# C and S Associate



**116, Grandpass Road,**
**Colombo - 14.**

எங்களுடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

வாழ்க தமிழ் ! வளர்க

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்!

# அருஜிணா ஜுவலரி

47 – A, செட்டியார் தெரு,

கொழும்பு – 11.

தொ.பே. 440042

With

Best

Compliments From

# mr. m. sudaharan

With Best Compliments From

# SUBRAMANIAM STORES

**Agents for : General Merchants**

**Liver Brothers Products Union Carbide Ceylon Ltd. Products.**

**No. 5, Main Street,**
**Haputale.**
**Tel: 057 - 68019**

*With Best Compliments From*

# AMEER HARDWARES

*Well Wishes From*

**Muthiah Sivabalaseelan**

**Muthusamy Rengaraj**

*With Best Compliments From*

# HOTEL MAHESH

(Vegetarian)
NO. 203, Galle Road,
Colombo - 03.
Tel : 342897

# ASIRI CAFE

(Vegetarian)
NO. 73, Maha Vidyalaya Mw.
Colombo - 13.
Tel : 343992

**WELL WISHES FROM**
**GANESHAN YOGANATHAN & GOVINDARAJ**

*With Best Compliments From*

# THE GLOBE HOTEL & RESTAURANT

**No. 25, Mudalige Mawatha,**
**(Bailie Street)**
**Colombo - 1**
**Tel : 320304**

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

# ஆண்டவன் கட்டளை

ஆதியொடு அந்தமாய்
அழியாத ஆன்மா.
அனாதியாய் அழியாத
ஆணவமும் கூடி.
விதியாலே பிறப்பெடுக்கும்
வினைகள் பல புரியும் - இது
சோதியாய் சுடர் பரப்பும்.
உமையவளை தன்னில்.
பாதியாய் கொண்ட நம்
ஆண்டவன் கட்டளை !

மண்ணிலே மனிதராய்
பிறப்பெடுத்த ஆன்மா
குழந்தையாய் குமரனாய்
அடியொன்றி வளரும்
மாய உடம்புக்கு பல
நாமங்கள் சூட்டும்
மதமென்றும் இனமென்றும்
வரப்புகள் வரையும் - இது
மங்காத புகழ் படைந்த
நம் ஆண்டவன் கட்டளை !

உயர்ந்தவர் தாழ்ந்தவர்
பேதங்கள் தோன்றும்
உணவுக்கும் உண்மைக்கும்
பஞ்சங்கள் தோன்றும்
உறவுகள் உணர்வுகள்
உற்றெடுத்து ஊரும்
உலகத்தை ஆளவே
ஆசை உருவாகும் - இது
உருவமாய் அருவமாய் அருள் புரியும்
நம் ஆண்டவன் கட்டளை !

சித்தத்தை சிதைக்கின்ற
யுத்தங்கள் தோன்றும்
நித்தமும் பாரினில்
இரத்த நதி ஓடும்
அறிவிலா மானிடர்கள்
வினைகள் பல புரிவர்
அறம் செய்த அறிஞர்கள்
உண்மை கண்டு தெளிவர்- இது
அன்பே தன் உருவான
ஆண்டவன் கட்டளை !

விஞ்ஞானம வளர்ச்சியால்
நன்மைகள் விளங்கும்
வீணான விவாதத்தால்
தீமைகள் தெரியும்
கலியெனும் கார்காலம்
பின்னர் உருவாகும்
அதன் பொல்லாத அறிகுறிகள்
இன்னேரம் தெரியும் - இது
சிதம்பரத்தில் சிலை படைத்த
நம் ஆண்டவன் கட்டளை !

கலியென்னும் கார்கால
இருளதனை அகற்ற
கருணை மிக காவலர்கள்
மண்ணில் அவதரிப்பர்
கட்டற்று அலைகின்ற
மனிதரை கண்டு
சொர்க்கத்தை அடைகின்ற
மார்க்கம் தன்னை உரைப்பர் - இது
பிறப்பும் இறப்பும் அற்ற
நம் ஆண்டவன் கட்டளை !

மெஞ்ஞானம் உரைத்த
காவலரை புறக்கணித்து
விஞ்ஞான வழியை கண்டு
மூடர்கள் நடப்பர்
எஞ்ஞானமும் பெறா நீசர்கள்
தலைமை பெற்று
அஞ்சாமல் கொலை புரிவர்
பாதகங்கள் புரிவர்
கலிகாலம் ஆரம்பிக்க
கடும் மழைகள் பொலியும் - இது
சூரர்களை வதம் செய்த
நம் ஆண்டவன் கட்டளை !

அக்கிரமம் அதிகரிக்க
அடங்காது தேசம்
ஆகையால் அதையடக்க
இறைவனே வருவார்
கடல் அலையில் குதிரையில்
காவலனாய் வருவார்
ஊழ் எனும் விதியாலே
நர்த்தனங்கள் புரிவார்
ஆதியோடு அந்தமாய்
அழியாத ஆன்மா
இறுதியில் பரம் பொருளின்
பாதங்களை சேரும்.

யுகம் யுகமாய் நடக்கின்ற
நர்த்தனம் இதுதான் - இது
அகம் புறமும் பிரித்தறியா
ஆண்டவன் கட்டளை !

ஸ்ரீ. தசாந்தி
திருக்குடும்ப கன்னியர் மடம்

*With Best Compliments From*

# SARATHA TEXTILES

Its Your Shop

**18, Kotmale Road,**
**Nawalapitiya.**

*With Best Compliments From*

# JEYATHAS EHAMPARAM

SECRETARY :
Soumia Cultural Organisation
43/1, New Chetty Street,
Colombo - 13.

# சிந்தனை ஊட்டும் திருவாசகம்

தத்துவம் என்பது மெய்ப்பொருள், அத்தத்துவத்தை ஆழமாகவும், அர்த்தமுள்ளதாகவும் விளக்கும் வாசகங்களிலே தெள்ளத்தெளிவாக விளக்குவது 'திரு' என்ற அடையைப் பெற்ற திருவாசகமேயாகும். பரம்பொருளே போன்று என்றும் பொன்றாத திருவாசகம் என்னும் பராமார்த்திகக் கவிதையைப் பாரில் உள்ளோருக்கு வழங்கியிருப்பவர் மாணிக்கவாசகரேயாவர். எல்லையில் பெருங்கூத்து விளைவிக்கும் கூத்தபெருமான் தன்னுடைய திருக்கரங்களாலேயே இந்நூலை எழுதினார், என சைவர்கள் தலைமேற் கொள்வார். இச்சிறப்பு மற்றைய திருமுறைகட்கு இல்லாததொன்றாகும்.

'திருவாசகம்' எனும் தொடர் மிகச சிறந்த சிந்தனைக்களையை மக்களுக்கு ஊட்டுகிறது. சிந்தனைச் சிகர திருவாசகத்தை ஓதுவதனால் கருங்கல் மனமும் கரையும், ஊற்று நீர் போல கண்களில் நீர் பெருகும், உரோமம் பொடிக்கும் விதிர்விதிர்ப்பெய்தி அன்பராகுவர். இதனால் அன்றோ

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ''வாதவூரன்ப பா எனப்படுவது உன் பாட்டு வேதம் ஓதி விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெருக்குருகி நிற்பவர் காண்கிலேன்'' என்று மாணிக்கவாசகர் பெருமான் மீது பாடியருளியுள்ளார்.

தேன் குடிக்க வந்து கை. கால் ஒட்டிக்கொண்டிருக்கும் எம்மை அதாவது ஆசையிலே சீரழியும் எம்மை பிறவிப் பெருங்கடல் நீந்தி, இறைவன் திருவடி சேர்வதற்காகவே பெருந்துறை மூழ்கிய புனிதராகிய மாணிக்கவாசகர் அருளியுள்ள வாசகமே திருவாசகமாகும்.

''வாதவூரர் அருளியதே வாசகம்'' என்றார் . சிவப்பிரகாச சுவாமிகள் அவ்வாசகத்திற்கு வாச்சியம் தில்லையிலே ஆடும் கூத்தபெருமானாவார். வாச்சியம் என்றால் உட்பொருள் அதாவது திருவாசகத்தின் உட்பொருள் இறைவனேயாவார். பாலினுள் தேன் கருப்பஞ்சாறு கலப்பதனால் உண்டாகும் சுவையை விட விஞ்சிய சுவையைக் கொண்ட திருவாசகம் எட்டாவது திருமுறையாக சைவர்களால் போற்றப்படுகிறது. திருவாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களுடன் திகழ்கிறது. அவைகளில் அடங்கியுள்ள பாடல்களின் தொகை அறுநூற்று ஐம்பத்தாறாகும். இப்பதிகங்களில் முதன்மை பெறுவது சிவபுராணமாகும். சிவனது அநாதி முறைமையான பழமையை உணர்த்துவது இப்பகுதியாகும். சிவபுராணத்தில் மாணிக்கவாசகர், தம் சிந்தையுள் சிவன் நின்ற கீர்த்தியைச் செப்புகின்றார். இத்தகைய சிவபுராணம் தத்துவ விளக்கத்தில் மிளிர்கிறது.

திருவாசகத்தின் அமைப்பை ஓர் உயர்ந்த மலைத்தொடரின் முடிமீது நடந்து

போவது போல ஒப்பிடலாம். நீண்ட மலைத்தொடரின் உச்சி ஒப்பமாக இருப்பதில்லை. மலையில் மேடும் பள்ளமும் பின்னிப் பிணைவது போல் திருவாசகத்தின் உள்ள பதிகங்கள் காணப்படுகின்றன. முடிவில் ஞானத்தை நல்கலாம்.

பிறவிகளுக்கு காரணம் நாம் செய்யும் வினைகளாகும். சைவசித்தாந்தம் வினையை மூவகையாகப் பிரிக்கிறது. அவை சஞ்சிதம் , பிராப்தம், ஆகாமியம் எனப்படும் சஞ்சிதம் வீட்டிலுள்ள நெற்களஞ்சியம் போன்றதாகும்.

உணவின் பொருட்டு பக்குவப்படுத்தி வைத்துள்ள அரிசி பிராப்தமாகும். இனி விளைந்து வீட்டிற்கு வர இருக்கும் நெல் போன்றது ஆகாமியம் ஆகும். இம்மூவகை வினைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு உரிய நெறிகளை திருவாசகம் கொண்டுள்ளது. அதாவது சஞ்சிதம் இறைவன் அருள் நோக்கினால் தீரும். பிராப்தம் உடற் பூசிப்பாய்க் கழியும். இறைபணியினின்று தற்போகம் இழந்து வாழ்பவனுக்கு ஆகாமியம் இல்லை.

''சாத்திரங்களும் தோத்திரங்களும் சைவர்க்கு இரு கண்கள்'' ஆகும். சாத்திரங்களினால் தத்துவத்தை தெளிகின்றோம். அவற்றை ஒழுகுவதற்கு உறுதுணையாவது தோத்திரங்களாகும். தோத்திர நூல்களின் உறுபயன் வினை நீக்கமேயாகும். இக்கருத்தை சிவபுராணத்தை தன்னகத்தே கொண்ட திருவாசகம் வலியுறுத்துகிறது.

திருவாசகத்தை பயிலும் போது பல வகை உண்மைகள் பலனாகும். நீர்த்தாகத்தால் வருந்துபவனுக்கு நீர் கிடைத்தால் போல தத்துவ தாகத்தால் வருந்துபவனுக்கு திருவாசகம் ஒரு அரிய வரப்பிரசாதமாகும். திருவாசகத்தினுள் ஆழமாக மூழ்பவர்களுக்கு திருவாசகம் தத்துவ ஜோதியாக மாறும் மெய்ப்பொருள் பற்றிய சிந்தனைக்கு திருவாசகம் ஒரு ஆலம் வித்தாகும். திருவாசகத்தை பொருளுணர்ந்து, நெக்கு நெக்குருகி ஓதினாலொழிய உய்வில்லை. தொல்வினை நீங்க திருவாசகம் ஓதுவீர்.

*''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் ''*

செல்வரட்ணம் செந்தூரன்
கணிதப்பிரிவு
உயர்தரம் – 99

# ஸ்ரீமத் பகவத் கீதையில் முதல் அத்தியாயத்தில்

"அர்ஜுன விஷாதயோகத்தில் திருதராஷ்டிரர் சொன்னது.
ஓஸஞ்ஜயா! தர்மக்ஷேத்திரமாகிய குரு க்ஷேத்திரத்தில் யுத்தம் செய்ய விரும்பித் திரண்ட நம்மவர்களும் பாண்டவர்களும் என்னதான் செய்தார்கள்?"

விளக்கம்:-

ஸஞ்ஜயா என்னும் சொல் விருப்புவெறுப்பு முதலியவைகளை அறவே வென்றவன் என்று பொருள்படுகிறது. ஓரம்சாராது நடு நிலையில் இருப்பவனுக்கே ஞானக்கண் உண்டாகிறது. ஆதலால் தான் வியாச பகவான் ஸஞ்ஜயனுக்கு யுத்தத்தில் நிகழ்பவைகளை உள்ளபடி காணவல்ல ஞனக்கண்ணைக் கொடுத்தருளுகிறார்∴.


தம் பிள்ளைகளைத் தம்பியின் பிள்ளைகளிடமிருந்து பிரித்து கூறுவதால் திருதராஷ்டிரருடைய மனநிலை வெளியாகிறது. போர் புரியாது நாடு தம் பிள்ளைகளுக்குச் சேர்ந்து விட வேண்டும் என்பது அவரது விருப்பம் தொன்றுதொட்டு அறத்தக்கு நிலைக்களமாயிருக்கும் குரு க்ஷேத்திரத்தின் மகிமையால் பாண்டவர்களிடமிருந்து, மண்ணாசை ஒழியவில்லையா என்பது அவருக்கு ஏற்பட்ட ஐயம்.

மூலம்:- பகவத்கீதை
L. மோகனதாஸ்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் -99

## பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு அமைந்துள்ள பெயர்கள்

| | | |
|---|---|---|
| அர்ஜுனன் | - | தூயஇயல்பு உடையவன |
| பாண்டவன் | - | பாண்டுக்கு மைந்தன் |
| தனஞ்ஜயன் | - | அடைபட்டுக் கிடக்கும் செல்வத்தைச் கேரிப்பவன் |
| கபித்வஜன் | - | குரங்குக் கொடியுடையவன் |
| குடாகேசன் | - | தூக்கத்தை வென்றவன் |
| பார்த்தன் | - | பிரிதாவின் மைந்தன் |
| அனகன் | - | பாபமற்றவன் |
| பரந்தபன் | - | எதிரிகளை வாட்டுபவன் |
| கௌந்தேயன் | - | குந்தியின் மைந்தன் |
| பாரதன் | - | பரதகுலத்தில் உதித்தவன் |
| கிர்டி | - | கீரீடம் தரித்தவன் |
| குருநந்தனன் | - | குருகுலத்தின் தோன்றல் |
| ஸ்வ்யஸாசின் | - | இடது கையால் அம்பு எய்பவன் |

*With Best Compliments From*



**PRASSAN**
**TRADING CO.**

S. 75, 3rd Floor,
Colombo Central Super Market Complex,
Colombo - 11, Sri Lanka.
Tel : 335418 Fax: 438151

*With Best Compliments From*



**PARA XPO PRODUCTS**
**( PVT) LTD**

**No . 30, Sea Avenue, Colombo 03.**

*With Best Compliments From*



# Rainbow Farm Shop

*Fresh Skinless Broiler Chicken * Fresh Dressed Broiler Chicken * Fresh Chicken Parts * Fresh Soup Chicken * Fresh Curry Chicken * Fresh Cockerel Meat *Ice Creams, Sausages, Groceries Etc.

**4 - C 5 Fussels Lane ( Inside Complex)**
**Wellawatte.**
**Tel : 075 - 511834**

*With Best Compliments From*

# KARUNA STORES

GENERAL MERCHANT COMMISSION AGENT AND IMPORTERS TYRES & OIL MILL MACHINERY SPARES, DISTRIBUTOR FOR LAXAPANA BATTERIES COLOMBO METRO, DEALERS IN KELANI TYRES AND SUPER EXIDE BATTERIES.

Head Office

Prakash Transports Service. 112, Dam Street, Colombo - 12.

434805

201 B, Dam Street,
Colombo - 12.

331711

*With Best Compliments From*

# THURKA
## INTERNATIONAL (PTE) LTD.

39 1/12, Chatham Street, Colombo - 1.
Sri Lanka.
Tel: 437109
Fax: 587352

*With Best Compliments From*

# SELVARATNAM STORES

WHOLESALE & RETAIL GENERAL MERCHANTS
Dealers in TEA & OILMAN STORES ETC.

11&13, Old Butcher Street,
Colombo - 11.
Tel : 327548

*With Best Compliments From*



# CHINESE GIFT PALACE

Dealers in Handicrafts, Brassware,
Statues, Curios etc.

No. 78, Galle Road, Colombo - 06.
Tel : 594931

*With Best Compliments From*

# NEW VIMAL ELECTRICALS
# DEARLITES (PVT) LTD.

**Dealers in All Kind of Electricals Goods**

78, maliban Street,
Colombo - 11.

*With Best Compliments From*

# EPSI COMPUTERS (PVT) LTD.

3rd Floor, Australia Building,
York Street, Colombo 1. Sri Lanka.
Tel : 448188, 329703 /4 Fax : 941575781

**Showroom :**
#02-10 Majestic City, Colombo 04.
Tel: 580754

*With Best Compliments From*

# New Central Pharmacy

**H. Lg. 01, Gunasinghepura,**
**Colombo - 12.**
**Tel : 439737**

***பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்***
***மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை***

# நாளை பொழுதுகள் நல்லதாய் பிறக்கும்

பாஷைகள் இல்லா அன்பினை - போலி
வேஷங்கள் போட்டு மறைக்க வேண்டாம்,
கடலையும் கண்ணீர் சிந்த வைக்கும் - வீண்
யுத்தங்களை மேலும் தொடர விட வேண்டாம்,
நிச்சயம் நாளைய பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

இயற்கைக்கும் உயிர் என்றொன்று உண்டு - அதன்
உணர்வுகளை மறக்க வேண்டாம்,
இற்றைவரை இறக்கமின்றி செய்த தவறுகளை
இனிமேலும் தொடர வேண்டாம்,
நிச்சயம் நாளை பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

ஜாதிகள் என்ற புது ஜாடிகள் செய்து - உங்கள்
ஜாதகங்களை புதிதாக மாற்றி எழுத வேண்டாம்,
ஜாதிகள் வேண்டாம் எனக் கூறும் - இளம்
காதல் ஜோடிகளையும் பிரிக்க வேண்டாம்,
நிச்சயம் நாளைய பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

வாழ்வதற்கு வழியை தேடுங்கள் - பிறர்
வாழ்வை அழித்துக் கொண்டு நீங்கள் வாழாதீர்கள்,
வசந்தத்தை வாரி அணையுங்கள் - வீண்
வம்புகளை விலை கொடுத்து வாங்காதீர்கள்,
நிச்சயம் நாளைய பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

நாளைய சமூகத்திற்காக நாமிருவரும் - நம்மவர்
இருவரை தருவோம் என முடிவு செய்யுங்கள்,
நாமிருவரும் சேர்ந்த நாளைய சமூகத்தையே தருவோம்
என எண்ணி மூன்று முடிச்சினை யாரும் போடாதீர்கள்,
நிச்சயம் நாளைய பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

வறுமை வாட்டுகிறது, விலைமாது ஆகுவதே - இனி
என் வழி எனப் போகாதீர்கள்,
ஆயிரம் கோடியை விலையாக கொடுத்தாலும் - மானத்தை
விற்பனை செய்து விட்டு விம்மி விம்மி யாரும் வாழாதீர்கள்,
நிச்சயம் நாளைய பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

ஒருத்தனுக்கு ஒருத்தி என்பதனை - ஓட்டை சிரட்டையில்
தண்ணீர் சேகரிப்பதாக்காதீர்கள்,
ஒருத்தியை மட்டுமே தொடுவேன் என ஒற்றுமையாக
அனைவரும் கங்கணம் கட்டிக் கொண்டு வாழுங்கள்,
நிச்சயம் நாளைய பொழுதுகள் நல்லதாய் பிறக்கும் !

நாளைய பொழுதுகள் நமக்காகவே !
நாடும் வீடும் அதற்காகவே !
நமக்குள் இறைவன் துணைக்காப்பதே !
நாளைய பொழுதுகள் நல்லதாகவே !!!

V. வசந்தன்.
கொழும்பு இந்து கல்லூரி.

# சமுதாய மேம்பாட்டுக்கு சமயங்களின் அவசியம்

உலகம் தோன்றிய ஆதிகாலச் சமுதாயத்தை சற்று சிந்தித்து பாருங்கள். தாய், தந்தை, சகோதரன், உறவுகள் அற்றுபோய் கண்டவன் கண்ட இடத்தில் உறவு கொண்டு மிருகங்களைப் போல பிள்ளைகளை ஈன்று அன்பு, உறவு என்பவற்றிற்கு அர்த்தமற்று வாழ்ந்தார்கள். சமூகம் சீர்கெட்டு பாழ்பட்டு நின்ற அந்தக்காலத்தின் போக்கை சீர்திருத்தி அமைத்த பெருமை சமயங்களைச் சாரும்.

சமுதாயத்தை இன்றைய நிலைக்கு அதாவது நெறியுள்ளதாக சீர் உள்ளதாக ஆக்கவே மதங்கள் தோன்றியுள்ளன. ஃதெய்வம் பலபல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் மூடர்” என்றார் பாரதியார். அதாவது சமயங்களின் பெயரால் எண்ணற்ற பல போர்களையும், எம் உடன் பிறப்புக்களின் மரணங்களையும் கண்ணுறும் போது மதங்களின் மீது ஆத்திரம் தோன்றுகிறது. இதனால் ஃமனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்” என்று விசனப்படும் அளவுக்கு மதங்களின் நிலை காணப்படுகிறது.

இந்த இழிநிலையைக் கொண்டு சமயங்கள் என்ற எண்ணக் கருவை நாம் புறக்கணிக்கலாமா? என்பதை சற்று சிந்தித்துப் பார்த்தால் எம்மை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த பெருமை மதங்களுக்குத்தான் உண்டு. கொடூரமான சிந்தனை, கேவலமான நடத்தைப் பாங்குகள் கொண்டவர்கள் கூட சமயத்துக்கும் இறைவனுக்கும் மதிப்பளிக்கத் தவறுவதில்லை.

மனிதன் என்பவன் ஆசாபாசங்களுக்குக் கட்டுப்பட்டவன் பல்வேறு தேவைகள் அவனுக்குண்டு. அத்தேவைகளை பூர்த்தியாக்குவதற்கு அவன் எத்தகைய வழிமுறைகளை கையாள்வான். அத்தகைய மனிதனின் ஆசைகளை நெறிப்படுத்தி மனிதனை மனிதனாக வழிப்படுத்தி வைத்த பெருமை சமயங்களைத்தான் சேரும்.

“பற்றில் வருவதே துன்பம்!” என்று குறிப்பிட்டு ஆசைகளைக் குறைக்கச் செய்து புலன்வழி உணர்வுகள் போகாவண்ணம் மனிதனை நெறிப்படுத்தியது சமயங்களதான். சமாதானம், சாந்தி, சகோரத்துவம் என்பவற்றை இனம், மொழி, நாடு வேறுபாடுகட்கு அப்பால் வலியுறுத்தியவை சமயங்கள். “அன்பே சிவம்” என்றும், “மற்றவரின் துன்பத்தில் பங்கெடுங்கள்” எனவும், “ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு” எனவும், சொல்லி மனித மான்பை அறநெறிப்படச் செய்தவை சமயங்களே.

கல்வியை எடுத்து நோக்கின் ஆரம்ப காலத்தில் சமயத்தின் பெயராலேயே கல்வி புகட்டப்பட்டது. மத, இலக்கிய நூல்களே பாட நூல்கள். அவற்றில் பாண்டித்தியம் பெற்றவர்களே அறிஞர்கள் என்ற நிலை இருந்தது. அந்தக்காலத்தில் சமயக் கல்வியில் சிறந்தவர்கள் ஒழுக்கசீலர்களாக உன்னத மகான்களாக இருந்திருக்கிறார்கள். ஃபண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” எனக்குறிப்பிட்டு கலாச்சார பாரம்பரியங்கட்கு ஏற்றவகையில் சமயங்களும் வளர்ந்து இருப்பதை காண்கின்றோம்.

சமுதாயம் மேம்பாடடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் மதபீடங்களும், யாகசாலைகளும் தான் ஆரம்ப பாடசாலைகளாக இருந்தன. வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள்தான் பாடத்திட்டமாக இருந்தன என பண்டை இலக்கிய ஆதாரங்கள் காட்டும்.

1505 ஆம் ஆண்டளவில் இலங்கை வந்த போர்த்துக்கீசரும் பைபிளுடன் வந்தனர் என யாழ்ப்பான வைபவமாலை குறிப்பிடுகிறது. எனவே எல்லா மதங்களும் தங்கள் தங்கள் மதநூல்களையும் மதபீடங்களையுமே பாடநூல்களாவும், பாடசாலைகளாகவும் வைத்து சமூக மேம்பாட்டுக்குழைத்ததைக் காண்கிறோம்.

சமயங்கள் கொள்ளீட்டலைப் பற்றியும் நூல்கள் மூலம் தெரிவித்தன. சுக்கிர நீதி போன்ற நூல்கள் வியாபாரம். பொருளீட்டல் போன்றவை எவ்வாறு நிகழ வேண்டும் என குறிப்பிட்டு நிற்கிறது. நாலடியார், திருக்குறள், நான்மணிக்கடிகை போன்ற அற நூல்கள் எல்லாம் மதக் கருத்துக்களை சமுதாயத்தில் சுமந்து வந்தவைதான்.இவற்றை எடுத்து நோக்கின உலக சுகபோகங்களுக்கு அடிமையாகி காணப்படும் இளைஞர்கள் சமய நெறிகளையும் சமய வழிகளையும் பின்பற்றுவதன் மூலம் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்,

இ. அனந்தன்
உயிரியல் பிரிவு
உயர்தரம் 99

WITH BEST COMPLIMENTS FROM

# E. SITHAMPALAM & SONS

*With Best Compliments From*

# GANESHA JEWELLERS

**For all Your Modern Designs & 22k. Golden Jewels, Visit Us.**

**52, Sea Street, Colombo 11.**

Tel : 432164

*With Best Compliments From*

# ORIENT

## Pharmacy & Groceries

FOR PATENT MEDICINES, HOUSEHOLD ITEMS AND GROCERIES

6-8, Kotahena Street, Colombo - 13.

Tel : 336451

WITH BEST COMPLIMENTS FROM

# New Colombo Stores.

167, 4th Cross Street,
Colombo - 11.
325648

# முடிவின் முடிச்சுக்கள்................

**விநாயகரகம்.**
**இணை அலுவலகம்**
**த.பெ.இல: எதுவாயினும்**
**கொழும்பு - விரும்பியது.**

ஆலய வாயிலை, நாடி ஓடினேன்.
கூடிப்,
பலர் கூட்டமாய் நின்றனர்.
தேடி,
ஒருவர் கரம் பிடித்து – – –
'சேதி யாதெனச் செப்பு' என்றேன்.
கரி முகத்து., கணபதியால்,
நரி மனத்து, மனிதனுக்கு,
மடல் ஒன்று, – – –
வந்தது,
காண் என்றார்.

மடலா!
என் கண்மடல்,
படபடத்தது.
உடல்,
ஒருமுறை இடம்பெயர்ந்து
வந்து நின்றது.
தொந்தி
வயிற்றுக் கணபதியின்,
கடிதத்தை – – –
மந்தி மன மனிதன்
ஒருவன்,
வாசிக்கலானான்.
நான்,
யோசிக்கலானேன்!

அகிலத்தின்,
அடிதடி – – –
ஐங்கரனாம் என்னை!
வருத்துகிறது.
மனிதன்,
மனதில் உள்ளது எல்லாம்,
கள்ள நரித்தனம்.
இவனைத் திருத்துவது எங்கனம்.
மனதில்,
இருக்க வேண்டும்
நல்ல குணம்.
இவன்
மனதில் இருப்பதோ! – – –
சண்டித்தனம்.

அதிர்ஷ்டம் சக்கரமதை,
சுழற்றிப்
பார்த்தேன்.
கலி காலம், – – –
இதுவென காலதுதனும்
உடனுரைத்தான்.
சரியாய்ப் போனது,
கடவுளுக்கும்
கலிகாலம் இதுவென்பது
மெய்யாய்ப் போனது.
பதறி வரும்
பக்தர் தம் இடர்
தீர்க்க வென்றே!
அமைத்தனர்,
ஆலயம்.
கால வெள்ளத்தில்,
குறிக்கோளும் கரைந்ததோ!
மனித
மனங்களில்,
காசுக்காய் கடவுள்
என்ற,
எண்ணமும் மலிந்ததோ!
வியாபாரக் கூடமாய்
கோயில்கள் ஆனதோ!
ஐயகோ!
ஐங்கரன் எந்தன்
தந்தமும்
ஒருநாள் விலை போகுமோ!
பக்திப் பரவசம்
எழுந்தாட வேண்டிய, – – –
ஆலயத்தில்,
காதல்!

கலியாட்டம் விரைந்து
நடை
போடுவதா?
கன்னியரும்,
களையரும்
கைகள் பிணைந்து, – – –
காதல் ரசம்! பாடுவதா?
ஐயகோ!
தாங்கமுடியவில்லை.
பிரமச்சாரி,
எனக்குப் பெண்ணாசை,
மூளுமோ!
இந்தத் தவற்றை
மனிதன்,
செய்வதா! – – –

உள்ளத் தூய்மைக்கு,
உருவச் சின்னமாய்; திருநீற்றையும்,
உலக ஒற்றுமைக்கு
சமாதானக் கொடியாய், வெண்புறாவையும்,
கொடுத்தேன்.
இறுதியில் பயனென்ன? – – –
பத்திரமாய்
இரும்புக் கூடடைத்தும்
புத்தியாய் பறந்து போனது!
பாரினுள்.
பாசமும் பறந்து போனது!
சிந்திக்கும்,
ஆற்றலும் சிதைந்து போனது,
முடிவெடுக்கும்,
மூளையும் மூச்சிழந்து போனது!
யோசிக்க எண்ணமின்றி
அன்னியரிடம்
அறிவுக் கடன்.
வெளி வேசம் காட்ட
எல்லாம்,
முகமூடிகள்.

அமைதிக்கு, அகிலம்!
ஆறுதலுக்கு, உலகம்!
என்று
அவசர அவசரமாய், புறப்பட்டேன்.

புதிர் போட,
வைத்தது, – – –
பூமியின் மெய்த் தோற்றம்!
எந்தன் வயிற்றுக்குள்,
ஒருநாள் !,
அணுகுண்டு வெடித்தது.
மொத்த அங்கமும்
அதிர்ச்சியால்,
வியர்த்தது.
மனிதரே! – – –
உமக்கு ஒருநாள்,
சேதி வரும்! – – –
விநாயகர்,
இறந்து விட்டார் என்று,
காரணத்தை,
புரிந்து கொள்வீர் – – –
தொடர்ச்சியாய் நடந்த,
குண்டு வெடிப்பு என்று.
ஆனால் – – –
ஒன்று, கூற மறந்து விட்டேன்.
சேதி கேட்க,
நீங்கள் இருக்க மாட்டீர்கள்.
ஏனெனில்,
உலகத்தின் அழிவு தானே!
உங்கள்!,
அழிவும்.
அறிவு! ஆறு ஆகியும்
தெரியவில்லை,
உங்களுக்கு சிந்திக்க!
அதனால் துணிந்து விட்டீர்கள்,
கடவுளையே நிந்திக்க.
முடிவின; முடிச்சுக்கள்
உங்கள்
கைகளில் – – –
முடிந்தால்,
அவிழ்த்துக் கொள்ளுங்கள்!
சரிவர! – – –

**-துதிக்கை-**

**மு. நிஷாந்தன்**
**கணிதப்பிரிவு**
**உயர்தரம்-99**

*With Best Compliments From*

# MR. M.R. FAHUMUDEEN

( Chemistry Teacher)

| | | |
|---|---|---|
| **Zec** | - | **Kandy** |
| **Sangam** | - | **Wellawatta** |
| **Brilliant** | - | **Kotahena** |
| **Venus** | - | **Vavuniya** |

*With Best Compliments From*

❖

❖

❖

## DINESH MANPOWER AGENCIES (PVT) LTD.

**OFFICE:**

25, Rajawatte Terrace,
Off Seibel Avenue,
Kirilapone, Colombo 5.
Sri Lanka.

Phone : 94 -1 - 823 476
Hand Phone: 94 - 71 - 29622
Hot Line: 94 - 78 - 68565
Fax: 94 - 1 - 826749
Telex : 22561 TELECON CE
21583 TELECO CE

# ஆதீனங்களும் மடங்களும்

சமய வரலாற்றுப் பரப்பிலே சமயத்தின் திறனை வளர்த்து எடுப்பதற்கு வேண்டிய சமய நிறுவனங்களில் முதல் நிலைப்பட்டதாய் காணப்படுவது ஆதீனங்களும் மடங்களும் ஆகும். இவை தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் சமயத்தை வளர்த்து சமய தொண்டுகள் புரிந்து மக்களை நல்வழிப்படுத்தல் ஆகும். இந்தியாவில் பல பாகங்களிலும் இவை தோற்றம் பெற்று சமய வளர்ச்சியில் ஈடுபட்ட இதேவேளை இலங்கையிலும் ஏனைய மதக் கலாச்சார ஆதீனங்களிலிருந்து சைவம் காப்பாற்றப்படுவதற்கு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நல்லூரில் இவ் ஆதீனம் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் இவற்றின் தோற்றங்கள் சமய வரலாற்று பரப்பிலே தனித்துவ நோக்கினை உருவாக்க காரணம் ஆயின.

இவ் ஆதீனங்களின் தோற்றம் பற்றி கால வரை முறையில் நோக்குமிடத்து சங்க காலத்திலே சங்கம் வைத்து தமிழ் வளர்த்த வேளையில் தமிழுடன் கூடியதாக சமயம் வளர்த்துவிடப்பட்ட நிலையில் சங்க மருவிய காலப்பகுதியில் இம் மடங்கள் அதிகமாகத் தோன்றி சமயத்தை வளம்படுத்தின என சிலப்பதிகாரம் நூல் கொண்டு அறியும் அதே வேளை பல்லவர் கால சமய வரலாற்று பரப்பில் அறிவு நிலைக்கு ஆட்பட்ட சைவத்தை வளர்க்க நாயன்மார்கள் தோன்றி ஊர் ஊராக திரிந்து மடங்களிலே தங்கியிருந்து சமயம் வளர்த்த நிலையில் திருஞான சம்பந்தரின் செயற்பாடுகள் இவற்றிற்கு தக்க ஆதாரம் ஆகின்றது. சோழர் காலத்தை பொறுத்த வரையில் சமய வரலாற்று பரப்பிலே ஒரு பொற்காலமாக கருதப்பட்ட நிலையில், சமரச நோக்கு கொண்ட சமய வளர்வு இங்கே இருந்துள்ள நிலையில் சிறப்பாக சைவத்தை வளர்த்து எடுக்க மடங்கள் தோன்றி பணி செய்தது என்பதை பெரிய புராண வாயினூடாக அறிய முடிந்துள்ள நிலையில் அப்பூதியடிகள், முருக நாயனார் போன்றோர் மடம் நிறுவி சமயத்தை வளர்த்து கொண்ட நிலையில், அதன் பிற்பட்ட காலத்தில் சமய நிலையில் ஏற்பட்ட சீர் அழிவு அந்நிய மதச் செல்வாக்கு பரம்பல், அரசியலில் ஸ்திரம் இல்லாத்தன்மை இஸ்லாமிய படை எடுப்புக்கள் இவற்றை எல்லாம் முறியடித்தும், சமயம், கலை போன்றவற்றை வளர்த்து பிற சமயத்திடம் இருந்து சமயம் காப்பாற்றப்பட்டு கோயில்கள் அழிக்கப்படுவதை தடுக்க சமயத்தின் நலிவு நிலை போக்க சிறப்பான கால கட்டமாக 14 – 18 நூற்றாண்டுகளை கொண்டதாக சமயத்தையும் கலைகலாசாரத்தினையும் வளர்த்து ஏனைய கால கட்டங்களை போல் தன்னிகரில்லாத்தன்மையை உருவாக்கப்பட்டவையே ஆதீனங்கள் ஆகும்.

இந்நிலையில் தமிழ் நாட்டில் எண்ணிறைந்த ஆதீனங்கள் தோற்றம்

பெற்ற நிலையிலும் அவற்றில் சிறப்பு வாய்ந்தவையாக திருவாடுதுறை, மதுரை, இராமேஸ்வரம், தர்மபுரம், குன்றக்குரவை, சொர்க்கபுரம், சிதம்பரம், திருச்சிராப்பள்ளி என்பன சிறப்பிடம் பெற்ற நிலையில் இலங்கையில் தோன்றிய ஆதீனத்தில் சிறப்பாக நல்லை ஆதீனம் தனித்துவம் பெற்றதாய் ஒரே யொரு ஆதீனம் என்ற பெயரையும் சிறப்பாகப் பெறுவதை காண முடிகிறது.

இவ் ஆதீனங்கள் தனித்துவம் பெற்ற நிறுவனங்களாக வளர்ச்சியடைவதற்கு உற்ற துணையாய் இருப்பது பொருள் ஆகும். எனவே இப் பொருளாதார வசதிகளை அரசிடம் இருந்தும் துறவு பூண்டோரிடம் இருந்தும் செல்வந்தரிடம் இருந்தும் நல்ல மன நோக்கு கொண்ட பெரியோர்களின் அனுசரணையுடனும் பொருளைப் பெற்று அவற்றின் உதவியுடன் சமயத்தை வளர்த்து செல்கின்றன. அவ்வாறான நிலையில்

1. சமூகப் பணி
2. சமயப் பணி

என்றும் உ வகைப்பட்ட சேவைகளைச் செய்து சமய வரலாற்றுப் பரப்பிலே தனித்துவமான ஓர் தனியிடத்தைப் பெறுபவை இவ் ஆதீனங்களாகும்.

சமூகப் பணியைப் பொறுத்த வரையில் சமுதாயத்திற்கு இன்றியமையாதது அறிவு. இந்த அறிவைப் பெற்று அறியாமையை நீக்குவதற்கு உறுதுணையாய் இருப்பது கல்வி. இக் கல்வியை வழங்கும் நிறுவனம் பாடசாலை எனவே பாடசாலைகள் ஊடாக மக்களின் கல்வி அறிவை வளர்த்து சமுதாயத்திலே தனித்துவம் பெற்றவர்களாக வாழச் செய்வது இவ் ஆதீனம் மேலும் சமூக வாழ்வில் சமயம் என்பது இன்றியமையாதது. அச் சமயத்தை வழங்கும் நிறுவனங்கள் ஆலயங்கள். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற பழமொழிக்கு ஏற்றதாக சமுதாயத்தை ஒழுங்குபடுத்தவும, '' கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் '' என்ற முது மொழியை கவனத்திற் கொண்டும் சமூகம் கூடி உள்ள இடங்களில் கோயில்களை உருவாக்கி அவற்றின் தேவைகளை எல்லாம் நிறைவேற்ற ஊழியர்களை நியமித்த நிலையில் சிறந்த கடமையாக கருதப்படும் நந்தவனம் அமைத்தல், தொண்டுகள் செய்தல், இவற்றுக்குரியதாக தொண்டர்களை நியமித்து அவர்களுக்கு கடன் வழங்கி அவர்கள் வாழ்வை வளம்படுத்துவதுடன் வேலை இல்லாப் பிரச்சனையையும் அது தீர்த்து வைக்கிறது. அவற்றுடன் கூடியதாக நாட்டினது பொருளாதார வளர்ச்சியும் கட்டி வளர்க்கப்படுகிறது. இப்பணிகளில் எல்லாம் பெரியோர்கள் ஈடுபடுத்தப்படுவதால் சமுதாயம் சீர் அமைக்கப் படுவதுடன் சமயமும் வளர்க்கப்படுகிறது.

சமயப் பணியை பொறுத்த வரையில், சமயம் உணர்ந்த மக்கள் மத்தியில் என்றும் நிலைத்து நிற்பதற்கு உற்ற துணையாய் இருப்பவை திருமுறைகள். இத் திருமுறையின் பெருமைகளை மக்களுக்கு எடுத்தியம்பும் வகையில் அவற்றை தொகுப்பு நூல்களாக வெளியீடு செய்வதுடன் சமய சம்பந்தமான

ஆய்வு நூல்களை வெளியீடு செய்து சமய விழாக்கள் கொண்டாடப்பட்டு வருவதுடன் சமய போதனைகளும் சமயக் கருத்து பரப்புவதற்குரிய கருத்தரங்கு தொடர்களும் வெளிநாடுகளில் தமது பணியை பறைசாற்ற எமது நாட்டு சமய வளர்ச்சி பணியின் திறனை எடுத்துக்காட்ட சமய மகாநாடுகள் நடாத்தி வருவதுடன் ஆதீனகர்த்தா உள் நாட்டிலும் , வெளிநாட்டிலும் சமய சொற்பொழிவுகளை ஆற்றுவதற்கும் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் செயல்ப்படுத்தவும் சமய வாழ்விலே தம்மை அர்ப்பணித்த பெருமக்களிற்கு கௌரவிப்புக்களும் சிறப்பாக பட்டங்கள் வழங்குதல் , பொற்கிளி வழங்குதல், என்பவற்றை ஒழுங்கு முறையாக மேற்கொள்வதால் ஆர்வம் உள்ள அனைவரும் இதில் பங்குபற்றி சமயத்தை வளர்த்தெடுக்க உற்ற துணையாய் இருப்பது இவ் ஆதீனங்கள் ஆகும்.

பொதுவான கடமைகளாக உலக தன்மையை கருதி

1. நவகோடி அர்ச்சனை, யாகங்கள் செய்விக்கப்படுவதால் நாடுகளிடையே சாந்தியும் சமாதானமும் நிலவுவதற்கு வழிவகுப்பதுடன்

2. ஆன்மீக வளர்ச்சிப் போக்கிலே தல புராண படிப்புக்கள், பிரபந்தங்களின் படிப்புகள் என்பவற்றை மேற்கொண்டு வருவதனால் சமய உணர்வான சிந்தனை வெளிப்பாடுகளும் அவற்றை மெருகூட்டும் வகையில் இசை, நடனம் போன்ற நுண்கலைப் பரப்புகள் பேணப்பட்டு இந்து பண்பாட்டு பாரம்பரியம் நிலைத்து நிற்பதற்கு காரணமாக இருப்பவை இவ் ஆதீனங்கள். இவை மட்டுமல்லாது,

3. கோயில் உற்சவ காலங்களில் தேவார பாராயன படிப்புகளும் சரித்திர வரலாற்றுப் படிப்புகளும் மேற் கொள்ளப்படுவதனால் சமுதாயத்தின் அறிவு வளர்க்கப்படுகின்றது.

4. ஆதீன முதல்வர்களை பரம்பரை பரம்பரையாக உருவாக்கி அவர்களின் துணையுடன் நிர்வாகத்தை வளர்ப்பதுடன் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் சமய சொற்பொழிவுகள் நிகழ்த்துவதால் உலக சமயம் வளர்க்கப்படுகின்றது.

5. நூல் வெளியீடுகளை செய்து சமயப்பணி, தமிழ்ப்பணி, தத்துவப்பணி மேற்கொள்ளும் நிலையில், இலக்கிய சொத்து திராவிட பிரசாரிகை, தமிழ் சமய ஆய்வு நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு வருகின்றன. இப் பணியில் சிறப்பாக நல்லை ஆதீனம் ''அருள் அமுதம்'' என்ற சஞ்சிகையை வெளியிட்டு இளைய தலைமுறையினருடன் சிறப்பாக சமய உணர்வைக் கலந்து வருங்காலத்தை வளம்படுத்துகின்ற அரிய பெரிய பணிகளை இவ் ஆதீனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

நா. நிஷாந்தன்
கணிதபிரிவு
உயர்தரம் – 99

*With Best Compliments From*

# Maruthe Steels

## Specialist in :
**Zincalume & Colorbond Roofing Products**

430, Old Moor Street,
Colombo - 12. 01200,
Sri Lanka.

Tel: 338260, 423316,
437310
Fax: 594495

# சைவத்தமிழே நீ போவதெங்கே.....

தமிழிற்கும் சைவத்திற்கும் ஆதியில்லை
பூமியில் இரண்டிற்கும் முடிவுமில்லை.
இந்துமத திருப்பிரிவாம் – தீ
பந்தத்தால் இருள்வாழ்வினை ஒளியாக்கி
நீர் பாரீர்.

ஆகமத்தின் அடிப்படையில் அறநெறிவகுத்து
யாகமதை நடத்திவிட்ட சைவமன்னர்
இக்கலியுகத்தை வந்து பாரீர் சைவத்தமிழ் தொண்டர்களின்
நரபலியை நடுங்கி விடுவாய்.

சங்காபிஷேகமும், பாலாபிஷேகமும், கும்பாபிஷேகமும்
சங்க காலத்திலே நடத்திவிட்ட சைவர்களே – இன்று
நம்மை நாயாய் உதைத்துவிட்டார் இரத்தாபிஷேகத்தால்!
சைவத்தின் சாந்தமது எத்தனை நாளிற்கு
சாந்தமும் மிரண்டுவிடும் சாதிவெறியில்.

மார்க்கமென்று மனிதன் வகுத்தது ஒழுக்கமதை நடத்திடவே
மதவெறியில் துடிதுடித்து அலையவல்ல
சிபி வாழ்ந்த காலடியில் மனுச்சோழன் சென்றபாதையிலே –இந்த
பாவிகள் சுவடுகள் போவது எப்போது
இறைவா அருள்புரிவாய் இவர்களிற்கு.

கருங்கல் கட்டி சிற்பக்கலையதனை வளர்த்த சைவசிற்பியரே
பெரு நகரில் வந்து பாரீர்! ஆலயத்தில் அசுரர்கள் ஆர்ப்பாட்டம்
மெய்யடியார் சைவரவர் வாழட்டும்
நிம்மதியோடு இவ்வுலகில்.

வேஷ்டி, சால்வையதனை அணிந்து திருக்கோயில் சென்ற அடியாரே
வேண்டாமென்று வெளிநாட்டு வெறுப்புடை அணிந்து
திருக்கோயிலை அசுத்தப்படுத்த, தெய்வமே - உன்
திருவருளினை அளியாயோ இவர்களிற்கு

திருக்கோயிலிலே திருவடியார் சென்று தொழுத காலம்
மருவிப் போனதென்று சொல்லிச் செல்லும் நாஷ்தியினரே
பல்லுலகம் பாராட்டி பரவசத்தால் மெய்ம்மறந்து மெய்யதனை
கல்லாக்கி வழிபட்ட சைவத்தமிழினமே

வாழ்க! வளர்க! என்றும் சிறப்போடு
வானுலகம் போற்று வாழ்வாங்கு வாழு.

**ஜி . விஷ்ணுகாந்**
**வர்த்தகபிரிவு**
**உயர்தரம் 99**

## நாவலர் நோக்கில் வேதாங்த சித்தாந்த சமரசம்...

'கரூதலர்க ளெனமருவு கவிஞர் கிடுகிடென வெழு
— கழகப்பிரசங்க சிங்கம்
கருதுவே தாந்தசித் தாந்த சம ரச சிந்தை கை வந்த
— கருணாகரம்'

தனது குருநாதர் சரவணமுத்து
புலவரைப் போற்றுகையில் கூறப்பட்டது .

*With Best Compliments From*



# A WELL WISHER

*With Best Compliments From*

# New Vishnu Trading Co.

No. 174, 4th Cross Street,
Colombo - 11.

☎ 324364, 434874.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# "நாமார்க்கும் குடியல்லோம்"

சோழநாட்டை இராஜேந்திரன் என்ற மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனுடைய ஆட்சிப்பகுதியாகிய சோழநாட்டைப் பார்ப்பதற்கு இருகண்கள் போதாது. அவ்வாறு சோழநாடானது அழகில் இயற்கை அன்னையின் கொடையை எடுத்துக்காட்டுவதாக விளங்கியது. எங்குபார்த்தாலும் பச்சைப்பசேலென்று காட்சியளிக்கும் நெல்வயல்களும் கனிகளெல்லாம் காய்த்துக் குலுங்கும் மரங்களாகவும் காணப்பட்டன. பறவைகள் எல்லாம் வேறுவேறு தேசங்களில் இருந்து பறந்து வந்து அங்கே கூடிவாழ்ந்தன. கொடுமை புரியும் மிருகங்கள் கூட ஒற்றுமையாக வாழ்ந்தன.

இத்தனை சிறப்புகள் பெற்ற சோழநாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்தது வாழையடி. அங்கு வாழ்ந்த மக்கள் எல்லோரும் தெய்வ பக்தி நிறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். எந்நேரமும் தெய்வ சிந்தனையிலேயே ஆழ்ந்திருப்பர். கௌரிவிரதம் முதல் சட்டிவிரதம்வரை ஒன்றையும் தவறவிடாது தவறுகள் எதுவுமின்றி அனுஷ்டிப்பர். அங்கே இருந்த சிவன் கோயிலிலே ஆறுகாலப் பூசைகளும் தவறாமல் நடைபெற்றன.

இந்த வாழையடியிலே பத்மநாதன் என்ற கவிவாணர் வாழ்ந்து வந்தார். அவரது வீட்டு நிலைமையை என்னவென்று சொல்வது? ஒருவேளைச் சாப்பாட்டிற்கு அல்லாடும் குடும்பம். ஆனால் அவரது மனைவியோ கணவனின் குறிப்பறிந்து நடப்பவர். வீட்டில் காணப்படும் ஏழ்மையை வெளியார் உணராதவாறு நல்லமுறையில் இல்லறம் நடத்திவந்தார். மற்றப் பெண்களைப்போல் ஊர்வம்பு பேசித்திரிபவர் அல்ல. இவர்களிற்கு இவர்களின் குணங்களைப் போலவே நல்லொழுக்கங்கள் நிறைந்த இரு பிள்ளைகள் காணப்பட்டனர். அவர்கள் தம் பெற்றோர் சொற்கேட்டு அறிவாளிகளாக விளங்கினர்.

பத்மநாதன் மிகுந்த தெய்வபக்தி உடையவர். அவர் எப்பொழுதும் இறைவன் பால் பல கவிதைகளை எழுதி இனிமையான இசையிலே பாடும் வழக்கத்தையுடையவர். அவரது கவிதையிலே தமிழ் கொஞ்சி விளையாடும். கேட்போர் மதிமயங்கக்கூடிய இசையில் கவிபாடும் வல்லமையுடையவர். தாம் எழுதிய கவிதையைக் கோயிலிற்கு எடுத்துச்சென்று சிவலிங்கத்திற்கு முன்னால் இருந்து மெய்மறந்து பாடுவார் . பாட்டு அவரது குடும்பத்திற்கு சோறு போடுமா ? அதனால் கோயிலில் தானம் வழங்குவோரிடமிருந்து உணவைப் பெற்றுக் கொள்ளுவார். எல்லா நாட்களும் இவ்வாறு உணவு கிடைத்து விடுமா ? சில நாட்கள் வயிராற உண்பார்கள். சில நாட்களில் அடுப்படியில் பூனைதான் படுத்திருக்கும். தண்ணீரைப் பருகி தமது பசியைப் போக்கிக் கொள்ள முயல்வார்கள்.

அன்றும் பத்மநாதன் கோயிலிற்குச் சென்று இறைவன்மீது பாமாலைகளால் பாடத் தொடங்கினார். அன்று அரசன் இராஜேந்திரனும் இறைவனை வழிபடும் பொருட்டு அக்கோயிலிற்கு வந்திருந்தார். அவர் பத்மநாதன் பாடிய பாடல்களைக் கேட்க நேரிட்டது. ஒரு நிமிடம் அவர் தனநிலையையே மறந்து இறைவனுடன் ஐக்கியமானார். மன்னனால் பத்மநாதனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. தான் அணிந்திருந்த நவரத்தின மாலையைக் கழற்றி பத்மநாதனிற்கு பரிசாக வழங்கினார். ஆனால் அதைப் பத்மநாதன்

மிகையாகாது. மிக மிகச் சிறிய காலத்துக்குள் சைவ மதத்தை வளர்ப்பதில் செயல்பட்ட பெரியார் இவர்ராவார்.

சைவ சமயங்களின் உண்மையானத் தத்துவங்களைப் பிற மதங்களுக்கு எடுத்துரைத்து சைவ சமயத்தின் பெருமையை உலகறியச் செய்தவர் நாவலர். அக் காலத்தில் சைவ சமயத்துக்கு '' பல பல '' எதிர்ப்புகள் வந்தது. சைவ மக்கள் தத்தம் வாய்களை மூடிக் கொண்டனர். ஆனால் நாவலர் '' எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு '' என்ற வள்ளுவன் வாக்கை மக்களுக்கு எடுத்துரைத்தார். சைவ மதம் இற்றைக்கு பெரும் புகழ் அடைந்துள்ளது என்றால் அது ஆறுமுக நாவலரின் பணிகளையே சாறும். இதிகாச நூல்கள், புராண நூல்கள் கூறும் உண்மைகளை சைவ மக்களுக்கு அளித்து அவர்களை சைவ மதத்தில் நம்பிக்கையை வருமாறு செய்தவர் இவராவார். சைவ மதத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்காக இலங்கையிலே பல இடங்களுக்குச் சென்று பல தலைப்புகளிலே பிரசங்கங்களை நடாத்தினார். இவரின் கருத்துக்களை மதித்தவர்கள் இன்பமான வாழ்க்கையை பெற்றார்கள். போர்த்துக்களின் காலத்திலே புதைக்கப்பட்ட நடராஜர் சிலை , பார்வதி சிலை, கணபதி சிலை போன்றவற்றை இறைவருளினால் கண்டறிந்தார். சைவ சமயத்தை வளர்ப்பதே இவருடைய குறிக்கோளாக இருந்தது என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ''அன்பே சிவம்'' என்ற வாக்கை மக்களுக்கிடையே புகுத்தினார். சைவ மக்கள் தம் எதிர காலத்தை வெறுத்த பொழுது அவர்களுக்கு இவ்வாறு பல பணிகளை சைவ சமயத்துக்காக செய்த இவர் இறைவடி சேர்ந்தார். அவர் மட்டுமே உலகத்தை நீக்கினார். ஆனால் அவர் உடைய பணிகள் உலகத்தை நீங்கவில்லை. இவர் செய்த பணிகளை நாம் பாராட்ட வேண்டும். '' என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உணவில்லை செய்நன்றி கொன்ற மதற்கு'' என வாக்கை பொய்படுத்தவில்லை எம் சைவ மக்கள். அவரின் ஞாபகார்த்தமாக நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகே அவரின் உருவம் பதித்த சிலை ஒன்றை கட்டுவித்தனர். அதுமட்டுமின்றி அவரின் பெயரில் ஒரு மடத்தையும் கட்டினார்கள். ஆறுமுக நாவலர் செய்த பணிகள் பற்பல. அவற்றில் இவை சிற்சில.

''வாழ்க நாவலர் நாமம் ''

எஸ். பிரேமனாத்.
பரிதோமாவின் கல்லூரி கல்கிசை.

*With Best Compliments From*

# SUBHA RANI
## Jewellers

**For All Your Requirements of 22 Ct. Gold Jewellery**

183,SeaStreet,
Colombo-11.
SriLanka.
Phone:447255

Branch:
471/A,GalleRoad,
Colombo-06.
Tel:594605,595109

*With Best Compliments From*

# NISHAAN LANKA
# CONSORTIUM (PVT) LTD.

*With Best Compliments From*

# PRABA

## TRADING CO.

*With Best Compliments From*

# ROTARY CLUB OF COLOMBO SOUTH

# "சுவாமி விவேகானந்தரும் இந்து சமயமும்"

1893ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ம் திகதியன்று காலை பத்துமணிக்கு "கொலம்பியன் ஹால்" என்ற மண்டபத்தில் எல்லாமதத்தின் மாண்புகளையும் கேட்டறிய விரும்பிய பேரறிஞர்கள் சுமார் பத்தாயிரம் பேர் கூடியிருந்தனர். அவைத்தலைவர் அந்த மகாசபையின் உயர் நோக்கத்தைப் பற்றி அழகிய முன்னுரையொன்று பகர்ந்தார். பின்பு உபந்நியாசகர்களை ஒருவர் பின் ஒருவராக சபைக்கு அறிமுகம் செய்து வைத்தார். அடுத்ததாக சைவ சமயத்தின் சார்பில் சென்ற அந்த பேரறிஞர் அழைக்கப்பட்டார். அப்போது அவரது முகம் ஞானஒளி வீசிப் பிரகாசித்தது. துலங்கும் சூரியன் போல் கண்கள் ஜொலித்தன. ரிஷிபுங்கவரின் தவவலிமை ஈண்டுத் திகழலாயிற்று. ஆசனத்தினின்று எழுந்திருந்து மேடையின் முன் வந்து நின்ற மகிமையே சபையோரது உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. கம்பீரத் தொனியில் "அமெரிக்க நாட்டு சகோதர சகோதரிகளே" என்று ஆரம்பித்தார். மேலும் அவரைப் பேசவொட்டாது தடுத்து இடியிடித்தாற் போல் கரகோஷம் முழங்கிற்று. இப்படியான பாராட்டுதலைப் பெற்றவர் வேறுயாருமல்ல. சிகாகோ மகாநாட்டில் இடம்பெற்ற சர்வமதமகாசபை மூலம் உலகப்புகழ் பெற்ற விவேகானந்தரேயாவார். அங்கு குடியிருந்த அறிஞர்கள் எல்லோரும் வேற்றுநாட்டில் இருந்து இங்கு வந்து தாம் எல்லோரையும் ஒரே குடும்பமாகக் கருதும் இந்த ஞானியைப் பலவாறு போற்றினர். ஒரேயொரு நாளிலேயே சுவாமிகளின் கீர்த்தி நாடெங்கும் திடீரென்று அபரிமிதமாய்ப் பரவுவதாயிற்று.

இவ்வாறு உலகப்புகழ் பெற்ற விவேகானந்தர் 1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் விசுவநாததத்தர் புகழ்பெற்ற வழக்கறிஞர். தாயார் புவனேஸ்வரி அம்மையார் தலைசிறந்த சிவபக்தை. இவரது இளமைப் பெயர் நரேந்திரன். இவரது குடும்பம் கல்கத்தாவிலேயே குடியேறியிருந்தது. இளம் வயதில் இருந்தே தியானம் செய்வதில் வல்லவனாக இருந்தார். சிந்தனையை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் நரேந்திரனிடம் அளவு கடந்து இருந்தது. இவர் ஆங்கிலம், வங்காளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். பீ.ஏ. பட்டதாரியானார். சட்டக் கலாசாலையில் வழக்கறிஞர் உத்தியோகத்துக்குப் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில் தந்தை காலமானார். குடும்பப்பாரத்தை இவரே ஏற்க வேண்டியதாயிற்று. சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளானார். இத்தருணத்திலேயே இராமகிருஷ்ண பரமஹம்சரைத் தக்கினேஸ்வரத்தில் 1882ம் ஆண்டு சந்தித்தார்.

இந்த சந்திப்பின் பின்னரே நரேனின் வாழ்வில் உயரிய திருப்பம் ஏற்பட்டது. முதல் சந்திப்பிலேயே நரேனுக்கு ஆர்வம் மேலோங்கியது. சில நாட்களில் இராமகிருஷ்ணரின் அருளாசியைப் பெற்று அவரது சீடரானார். அதுமட்டுமல்லாமல் இராமகிருஷ்ணரின் சீடருள் தலையாய சீடனானார்.

இராமகிருஷ்ணரும் தம் ஆத்மசக்திகளை நரேனுக்கு அளித்துவிட்டு 1886ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி மகா சமாதியடைந்தார். அதன் பின்னரே நரேனது அதாவது விவேகானந்தரது சமய சமூகப்பணி ஆரம்பமாகியது.

சுவாமிஜி பரிவிராஜகராகப் பாரதத் திருநாட்டை வலம் வந்தபோது மக்கள் அனைவரிலும், ஏழை எளிய மக்களே அவர் மனதை நெகிழச் செய்தனர். அவர்களது நிலை உள்ளத்தை உருக்கியது. மற்றும் பாரத மக்கள் தம் புகழ்மிக்க பண்பாட்டு பாரம்பரியத்தை மறந்து விட்டனர். ஏழை எளியோர் தம் தலைவிதி என்று சகித்து வாழ்ந்தனர். எனவே பாரத நாட்டிலே மறுமலர்ச்சி ஒன்று தேவைப்படுகிறதென்பதைச் சுவாமி விவேகானந்தர் உணர்ந்தார். இப்படி இருக்கையில்தான் சிக்காகோவில் சர்வமத மாநாடு நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு பாரதத்துக்கு சிறப்பைப் பெற்றுக் கொடுத்தார்.

இவர் தாய்நாட்டைப் புனர் நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டார். இதற்கு கல்விமுறையில் மாற்றம் செய்யவேண்டும் என அறிவுறுத்தினார். தாய்மார்களுக்குரிய பங்கினையும் வலியுறுத்தினார். ''தாய்மார்களைப் போற்றி மதியாத எந்தவொருநாடும் மக்களும் சமுதாயமும் பெருநிலை எய்தியதில்லை. முன்னேற வேண்டுமெனில் தெய்வத்தாயின் உயிரோட்டமுள்ள நடமாடும் சின்னங்களாகத் திகழும் தாய்மார்களை மேம்படுத்த வேண்டும்'' என்று கூறினார்.

மேலைநாடுகளுக்கு மீண்டும் ஒருமுறை பயணமானார். இரண்டாம் பயணம் நிறைவேற முன் இராமகிருஷ்ண துறவியர் மடத்தை நிறுவும் தலையாய கடமையினை மேற்கொண்டார். 1898ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ம் திகதி சின்னங்களும் திருவுருவப்படமும் தாங்கிய ஆலயம் நிறுவப்பட்டது. இங்கேயே ஒரு மடமும் நிறுவப்பட்டது. இம்மடமானது இன்றைக்கு உலகெங்கும் இருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடங்களுக்கெல்லாம் தலைமை மடமாகத் திகழ்ந்து வருகின்றது. ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அரிய போதனைகளையும் மற்றும் பல உயர்ந்த கருத்துக்களையும் எண்ணங்களையும் மக்களுக்குப் புகட்டுதற்கென ''பிரபுத்த பாரதம்'' எனும் பெயரில் மாதாந்த பத்திரிகை ஒன்றை ஆங்கிலத்திலும் ''உத்போதனம்'' என்ற வங்காள மொழிப்பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டார். விவேகானந்தரது ஊக்கத்தினாலும் அவர் சீடரான கல்யாணானந்த சுவாமிகளின் முயற்சியாலும் காசியில் தலைசிறந்த ஆஸ்பத்திரி ஒன்று உருவாகியது. இங்கிலாந்திலிருந்து விவேகானந்தரது சீடர்களாக இந்தியா வந்த சேவியர் தம்பதியினர் அளித்த பெருநிதியைக் கொண்டு ஹிமால்யப் பர்வதத்தில் அல்மோறா ஜில்லாவில் மாயாவதி எனும் ஓர் ஏகாந்தமான இடத்தில் ''அத்லவத ஆசிரமம்'' என்ற மடம் ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வாறே சென்னையிலும் இராமகிருஷ்ண மடம் நிறுவப்பட்டது. வங்காளத்தில் மூர்தாபாத்தில் அனாதைகளுக்குக் குருகுல ஆசிரமம் அமைக்கப்பட்டது.

1899ம் ஆண்டு மேல்நாடுகளுக்குப் புறப்பட்ட விவேகானந்தர் கலிபோனியா மாகாணத்தின் பற்பல ஊர்களிலும் நகரங்களிலும் சுமார் 100 உபாந்நியாசகங்களுக்கு மேல் செய்தருளினார். அவரது உயர் கருத்துக்கள் உழன்றுகிடந்த மேல் நாட்டாரது உள்ளத்தில் ஒளிவிளக்கு ஏறினாற்போல ஊடுருவிப் பாய்ந்தன. தம்மிடம் வந்து அணுகினவர்களுள் பரிபக்குவமடைந்த சிலருக்கு மந்திர தீட்ஷை அளித்தார். கலிபோர்னியாவிலும் வேதாந்திகள் யோகசாதனம் பயில்வதற்காக ''சாந்தி ஆசிரமம்'' என்ற பெயரில் நிலையமொன்று நிறுவப்பட்டது. இவ்வாறு உலகம் முழுவதும் திக்விஜயங்களை மேற்கொண்டு இறுதியாக கீழ் வங்காளத்துக்கு திக் விஜயம் செய்ததுடன் அவரது அருள்பணி பூர்த்தியாயிற்று. தம் குருநாதர் பணித்தபடியே உலகின் பல கண்டங்களுக்கும் சென்று தம் அருட்பணியை முடித்துக் கொண்டு கல்கத்தாவில் தலைமை மடத்துக்கு திரும்பினார். மேலும் தமது சீடருள் ஒருவரான சிவானந்த சுவாமிகள் காசிக்குச் சென்று ''ஸ்ரீராமகிருஷ்ண அத்வைத ஆசிரமம்'' எனும் மடாலயத்தை அமைத்து அதை நடத்துமாறு பணித்தார். இப்படியே காலம் கழிந்தது.


1902ம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியன்று பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆயின் சுவாமிகள் பல்லாயிரம் பேர் ஒருதினத்தில் ஒன்றுகூடி ஆடியும் பாடியும் ஓலமிட்டு விட்டுப் பிரிந்து செல்வதில் நன்மை விளையாது. அதற்குப் பதிலாக அமைதியாக சாஸ்திர ஆராய்ச்சி செய்தல், பராமர்த்திகத் தத்துவங்களை விளக்குதல், தியானம் பயிலல் மௌனம் சாதித்தல் போன்ற சீரிய சாதனைவகைகளைச் சில நாட்களுக்குத் தொடர்ந்து அனுஷ்டிக்க வேண்டும்.பரமஹம்சர் புகட்டிய பாராமர்த்திகப் பெருநெறிகளை துருவி ஆராய்தற்கும் அவைகளை அனுஷ்டிக்க சந்தர்ப்பமளிக்க வேண்டும். நாளடைவில் இவ்வாறே அனுஷ்டிக்கப்பட வேண்டும் என சிஷ்யர்களுக்குக் கூறினார்.

இவ்வாறு இந்து சமயத்திற்குப் பலவித சேவைகளை ஆற்றிய அந்த மகாரிஷி 1902ம் ஆண்டு ஜுலை 4ம் திகதி மாசி சிவராத்திரியன்று மகாசமாதி அடைந்தார். சுவாமிகள் சமாதியடைய சில நாட்களுக்கு முன்பு ''நான் விரைவில் உடலை உகுத்துவிட்டு உருவமற்ற ஓசையாக இலங்குவேன்'' என்று பகர்ந்தருளியிருந்தார். அதுபோல் அன்றும், இன்றும், என்றும் அவர் உருவமற்ற அருள் ஓசையாக இருந்தார். இருக்கிறார், இருப்பார் !

பா. வசந்த கிருஷ்ணன்
உயிரியல் பிரிவு
உயர்தரம் – 99

*With Best Compliments From*

# TECHNO LANKA COMPSYSTEMS



**Head Office :**
No.F104,PeoplesParkComplex,
Colombo11.
SriLanka
Tel :94-1-434759
Fax :94-1-348078

**Service Lab**
910/4,EthulKotte
Tel:94-1-875750
HotLines:077-301922,071-54737
Email :technolk@slt.lk

*With Best Compliments From*

# NEW RUPA SHOPPING CENTRE

***Oilman Goods Pharmacy Textiles Groceries***

***Electrical Goods & Stationery***

Free Door Delivery

**No. 118, Galle Road, Colombo - 04.**
**Tel : 582427**

*With Best Compliments From*

# K.K.S. ASSOCIATES

GENERAL RICE MERCHANTS, COMMISSION AGENTS &
DEALERS IN CEYLON PRODUCE

181, Dam Street,
Colombo - 12.
Tel : 432802

*With Best Compliments From*

# K.K.R. BUILDERS

Building Contractors, Developers, Planners,
Engineers & Consultants

**Office:**
**No. 44, 33rd Lane,**
**Colombo - 06.**
**Sri Lanka.**

**Tel : 594061**
**Fax : 597550**
**Mobile : 0722 - 55029**

*With Best Compliments From*

# CITY CYCLE INDUSTRIES

119, Dam Street
Colombo - 12.



*With Best Compliments From*

# Asians Traders

*Wholesale Dealers in Textiles & Readymade Garments*

Velona Super Market, 112/11, Keyzer Street,
Colombo 11. Sri Lanka.
Tel : 341559 Res: 436223

*With Best Compliments From*

# VISAKA TEXTILES

(Air Conditioned)

Dealers in local and imported Textiles

**ASLAM TRADE CENTRE**
**188/1J, KEYZER STREET**
**COLOMBO - 11**
**TEL: 447837**

## பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# 'வாய்மையே வெல்லும்'

அன்று அதிகாலை ஐந்து மணிக்கே அத்தோட்டத்தில் ஒரு மூலையில் இருந்த காம்பராவில் குப்பிவிளக்கு ஒளிர்ந்து கொண்டிருந்தது. அந்த காம்பராவில் வசித்த ஏழு மனிதஜீவன்களுக்கும் அன்றைய நாள் மிக முக்கியமானது. ஆம் இன்று தான் அந்தக் குடும்பத்தின் வாழ்வில் வசந்தத்தை தந்த அந்தச் சிவப்பு ரோஜாச்செடியின் உரிமை யாருக்கென்பது நிர்ணயிக்கப்படப்போகின்றது. அந்தக் காம்பராவில் சுப்பண்ணாவின் குடும்பம் எத்தனையோ வருட காலமாக வசித்து வருகின்றது.

சுப்பண்ணா ஒரு தோட்டத்தொழிலாளி. கடுமையான உழைப்பாளியும் கூட. சுப்பண்ணாவின் மனைவி மீனாட்சி, மூத்தபிள்ளை செவ்வந்தி, இரண்டாவது மகன் சின்னத்தம்பி , கடைக்குட்டி தம்பிராசு. சுப்பண்ணாவின் பெற்றோர் ஆகிய அறுவரின் சீவியமும் அவனது வருமானத்திலேயே தங்கியிருந்தது. மீனாட்சியும் சில வேளைகளில் கங்காணி வீட்டில் வேலை செய்து வந்தாள். ஆனாலும் அவ்வாறு பெற்ற வருமானமும் கூட போதுமானதாக இருக்கவில்லை. இந்நிலையில்தான் மேலும் துரதிஷ்டவசமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. சுப்பண்ணாவின் காம்பராவிற்கும் சின்னராசுவின் காம்பராவிற்கும் இடையில் ஒரு சிவப்பு ரோஜாச்செடி முளைத்திருந்தது. இரண்டு காம்பராக்காரர்களும் போட்டி போட்டுக்கொண்டு அச்செடியை வளர்த்தவாறு இருந்தனர். திடீரென்று ஒருநாள் சுப்பண்ணா எதிர்பாராத வகையில் சின்னராசு அச்செடியை பிடுங்கி எறிந்து விட்டு அது வளர்ந்த இடத்தில் ஒரு மாங்கன்றை நட்டுவிட்டான்.

ஆரம்பத்திலிருந்தே ஏனோ தெரியவில்லை சுப்பண்ணாவிற்கும் சின்னராசுவிற்கும் அவ்வளவாக ஒத்துப்போவதில்லை. அவ்வாறு இருக்கும்போது சின்னராசு செய்த இந்தச்செயல் சுப்பண்ணாவின் பொறுமையை சோதித்தது. உண்மையில் அந்த ரோஜாச்செடி சுப்பண்ணா 'டவுனுக்கு' போகும்போது மகள் செவ்வந்திக்கு பரிசாக வாங்கிக்கொடுத்ததுதான். அச்செடி கிள்ளியெறியப்பட்டதிலிருந்து செவ்வந்திக்கு உணவு தொண்டையுள் இறங்க மறுத்தது. மீனாட்சி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் செவ்வந்தியால் அந்த ரோஜாச்செடியை மறக்க முடியவில்லை. அவள் எப்படி மறப்பாள்? பாவம், அவளது உயிரே அந்த ரோஜாச் செடியின் மலர்களிலேதான் இருந்தது என்பதை அவள் மட்டுமே அறிவாள். ''அம்மோய் எனக்கு அந்த ரோசா இல்லாதது என்னமோ மாதிரி இருக்கும்மா '' செவ்வந்தி கூறினாள். ''ஏம்மா சின்னராசு மாமாவுக்கு அந்த செடில ஏம்மா கோவம், அத கிள்ளி எறிஞ்சுப்புட்டாங்களே பாவிங்க '' விம்மல்களுக்கு நடுவில் செவ்வந்தி தன் தாயிடம் கூறியழுதாள். இதைக்கேட்டுக்கொண்டு இருந்த சுப்பண்ணாவுக்கு உடல் முறுக்கேறியது. உடுத்தியிருந்த சாரத்தை மடித்துக்கட்டியவன் சின்னராசுவின் காம்பராவை நோக்கி ஆவேசத்துடன் சென்றான்.'' ஏலே சின்னராசு உப்புப்போட்டு திங்கறவனா இருந்தா வெளிய வாடா நாயே'' சுப்பண்ணாவின் அலறலால் அந்த லயமே அதிர்ந்தது. தூங்கிக் கொண்டிருந்த சின்னராசுவும் விடுவானா என்ன ? அவனும் பதிலுக்கு'' எவன்டா அவன் இந்த லயத்தில ஏன் பேரச்சொல்லி கூப்புடறது'' கத்தினான். வெளியே சுப்பண்ணா நிற்பதைப்பார்த்தவுடன் அவனுக்கு விஷயம் விளங்கி விட்டது. '' என்னடா கட்டபொம்மன் மாதிரி நிக்கறே சொல்ல வந்ததைச் சொல்லிட்டுப் போவியா'' எகத்தாளமாய் சின்னராசு கத்தினான். '' செய்யிறதுயுஞ் செஞ்சுட்டு பெரிய தொர கணக்கா பேசுறியே, ஏன்டா ஏன் மேல வச்ச பகையை தீர்த்துக்க உனக்கு அந்தரோசாச் செடிதான் கிடைச்சுதா ?''

சுப்பண்ணா பெருங்குரலெடுத்து கத்தினான். '' ஏன்டா கூடப் பேசிக்கிட்டிருக்க என்னை என்ன துப்பில்லாதவன்னுன்னு நினைச்சிக்கிட்டியா ? இவர் பெரிய தர்மபுத்தரு அசோக மரம் நட்டுப்புட்டாராம் நான் புடுங்கிப்புட்டனாம்'' சின்னராசு எக்காளமிட்டு சிரித்தான். ''ஒன்னோட பேசிப் பிரயோசனம் இல்லடா இருந்து பாரு நான் இத டவுனில கோர்ட்டுக்கு கொண்டு போறனா இல்லயா பாரு. அங்க வா நாம பேசிக்கலாம் '' சுப்பண்ணா கூறிவிட்டு தனது காம்பராவை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவன் உள்ளே வந்ததும் செவ்வந்தியும் , மீனாட்சியும் பதைபதைத்துக் கூறினார்கள். '' அப்பா. ஒனக்கு ஏன் இந்த தேவலாத வேலை. சின்னராசு கங்காணியோட சப்போர்டுன்னு ஒனக்கு தெரியுமில்ல. அம்புட்டு இருந்தும் நீ வழக்குப்போடப் போறியாமே'' செவ்வந்தி கூறிமுடித்தாள். அவன் பேசும்வரை காம்பராவிற்கு வெளியே வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்த சுப்பண்ணா கூறினான் '' இதப்பாரு புள்ள ஒனக்கு இந்த விசயமொண்ணும் புரியாது. நீ சும்மா கம்முனு கிட இன்னிக்கு மரத்தை கிள்ளியெறிஞ்சவன் நாளைக்கு நம்மையுங் கொல்லமாட்டான்னு என்ன நிச்சயம் ? அவனா நானான்னு ஒருகை பாத்துர்றேன் '' என்னதான் சுப்பண்ணா தன்னை வீரனாக காட்டிக்கொண்டாலும் அவனுக்கும் மனத்தினுள் சிறு தயக்கம் இருந்தது. '' சே, அவசரப்பட்டுட்டோம் போல இருக்கு, வழக்குக்கு எவ்வளவு காசு வேணும் அதெல்லாம் நம்மகிட்ட இருக்கா '' யோசித்தான்.

இன்று அவனும் சின்னராசுவும் டவுன் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார்கள். கங்காணியின் உதவியால் சின்னராசுவுக்காக வாதாட பெரிய வழக்கறிஞர் ஒருவர் வந்திருந்தார். சுப்பண்ணாவுக்காக வாதாட செவ்வந்தியின் நண்பியின் தந்தை வந்திருந்தார். விசாரணை ஆரம்பமாகியது. கங்காணி சுப்பண்ணாவைப் பார்த்து தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார். சின்னராசு அந்த ரோசாச்செடி யாருடையது என்ற கேள்விக்கு அது தானே வாங்கி வந்து நட்டதாக வாய் கூசாமல் பொய்சொன்னான். அது போதாதென்று '' தொரமாரே இந்த சுப்பண்ணா என்னப்பத்தி ஊரெல்லாங் கத கட்டுறானுங்கோ. இந்த ரோசா தன்னுதுதானுன்னு சொல்லிக்கிட்டு அந்த ரோசாவில பூக்கற பூவெல்லாம் புடுங்கிக்குவானுங்கோ'' என்று வேறு கூறினான். சுப்பண்ணா தரப்பில் ரோசா அவனுடையதுதான் என்பதற்கு சாட்சி இல்லாத காரணத்தால் வழக்கு மறுநாள் ஒத்திவைக்கப்பட்டது. நீதிமன்றத்தை விட்டு அவசரமாக வெளியேறிய சுப்பண்ணா தோட்டத்துக்கு போக பஸ் பிடிக்க பாதையை கடந்த போது அவனுக்கு அந்த ரோசாச் செடியை விற்ற பூக்காரனை கண்டான். மறுநாள் நீதிமன்றத்தில் பூக்காரனின் சாட்சியினால் சுப்பண்ணாதான் ரோஜாச் செடியின் உரிமையாளன் என்று தீர்ப்புக்கூறப்பட்டது. அத்துடன் சின்னராசு பொய் கூறியதற்கும் செடியை சுப்பண்ணாவின் அனுமதி இல்லாமல் கிள்ளி எறிந்ததற்கும் அபராதம் விதிக்கப்பட்டது. சுப்பண்ணா நன்றிப்பெருக்குடன் பூக்காரனையும் வழக்கறிஞரையும் நோக்கி கைகூப்பினான்.

வழக்கு முடிந்து சுப்பண்ணா காம்பராவை அடைந்தபோது அவனது குடும்பத்தினர் அனைவரும் ஆவலாக காத்திருந்தனர். அவசர அவசரமாக சுப்பண்ணாவிற்கு குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்த மீனாட்சி கேட்டாள் '' என்னங்க டவுனில என்ன ஆச்சு ?'' சுப்பண்ணா தன் காவி நிறப்பற்களை காட்டி சிரிக்கவும் ஐந்தாம் ஆண்டில் படிக்கும் சின்னத்தம்பி தன் தமிழ்புத்தகத்திலிருந்து '' வாய்மையே வெல்லும்'' என்ற வரியை வாசிக்கவும் சரியாக இருந்தது '' அப்பா வாய்மை வெல்லுமாப்பா ? '' கடைக்குட்டி தம்பிராசு கேட்க சுப்பண்ணா பலமாக தலையாட்டினான். '' ஆமாம்பா வாய்மைதான் எப்பவுமே வெல்லும்''.

நன்றி.

**நர்த்தினி இராஜேந்திரன்**
**சைவ மங்கையர் கழகம்**

WITH

BEST

COMPLIMENTS FROM

K. ANANDA KUMAR

With Best Compliments From

SAKURAA STEEL CENTRE

Specialist in Lanka Tor Steel

354, Old Moor Street, Colombo - 12.

Tel : 437574, 336574

*With Best Compliments From*

# Orient Trading Company

**Agents/Importers**

Red Heart, Pilot,Mayflower,
Brand Cake - Margarines
Pastry-Margarines, Fats for Icing
Biscuit Cream, Biscuit, Ice Cream, Etc..

**95, Galle Road, 2nd Floor,**
**Bambalapitiya, Colombo - 4.**

**Tel : 593459, 580547**
**Fax: (94-1) 580547**

*With Best Compliments From*

# DESIGN

## TEXTILES

133, GALLE ROAD, COLOMBO 4.
SRI LANKA
587312

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# ஆறுமுக நாவலர்

ஈழத்திலே தோன்றிய சைவப் பெரியார் வரிசையிலே நிரந்திரமாக இடம் பிடித்த பெருமைக்குரியவர் ஆறுமுக நாவலர் ஆவார். இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பதினேட்டாம் நாள் பிறந்தார். இளமையிலே ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைத் துறைபோகக் கற்றார். இவருடைய மனம் சைவத்துக்கு பெருந்தொண்டாற்றத் தூண்டியது. தனது வாழ்க்கையைப் பொருட்படுத்தாது பிரம்மச்சாரியாக இருந்து சைவ சமயத்தை வளர்ப்பதில் சிறப்புடன் செயல்பட்டார்.

இடையரும் கடைகாலத்தில் விடியமுன் விசும்பில் விளங்கும் வெள்ளி போல தமிழகத்தில் தமிழரும் சைவம் தழைய அச் சைவத்துக்கு புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளாலர் நாவலர் என்றால் அது மிகையாகாது. அக் காலத்தில் சைவ சமயம் அழிவுற்ற நிலையில் இருக்கும் பொழுது இப் பெரியார் சைவ மதத்தை வளர்ப்பதற்காக பல சைவ பிரசங்கங்களை நடாத்தினார். அது மட்டுமன்றி அக் காலத்தில் போர்த்துக்களால் அழிவுண்ட நமது திருகோணேச்சரத்தை திருப்பிக் கட்டும் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டார். ஈழத்தில் சைவத்தை வளர்ப்பதற்கு நல்லூரிலும் யாழ்ப்பாணத்திலும் சைவ பிரசங்கசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி அளித்துதவினார். அக்கால சைவ மாணவர்களுக்கு படிப்பதற்காக ஏடுகளே இருந்தன. இவற்றைக் கண்டு தாமே பல புத்தகங்களை எழுதினார். அவ்வாறு வந்தவைகளே சைவவினாவிடை , பால பாடங்கள். நன் நூற்காண்கை என்பனவாகும். போர்த்துக்கலின் காலத்திலே தைரியமும். வீரமும். நன்நம்பிக்கையும் கொண்டு தனது உயிரகை கூட துச்சமாக எண்ணி சைவ சமயத்தை வளர்ப்பதில் அரும்பாடுபட்டார். நாவலருடைய பணிகளினாலேயே இன்று சைவ மதம் வளர்ச்சியடைந்துள்ளது எனலாம். அக் கால மக்களுக்கு சைவ மதத்தின் பெருமையை அவர்களின் மனதில் நிலைநாட்டி அவர்களை சைவ மதத்துக்காக போராடும் வகையில் செய்தமையும் இவரையே சாறும். இவரது திருப்பணிகளைக் கண்ட திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தது. ஈழத்தில் மாடுகளை வெட்டி அழிப்பதை கண்டு இந்திய தேசத்துக்கு ஓடிய ஞானபிரகாசரை விட ஈழத்திலே இருந்து சைவ சமயத்துக்கு தொண்டாற்றிய நாவலர் ஒரு மகான் என்றால் அது

தீண்டக்கூட இல்லை. ''மன்னா என்னை மன்னித்துக்கொள் நான் இறைவன் மீது பாடிய இப்பாடல்கள் பணத்திற்காகப் பாடப்பட்டவையல்ல. அதை மறந்து நான் உன்னிடம் பணம் வேண்டுவேனாகில் பஞ்சமாபாதகங்களும் செய்ததற்குச் சமம். எனவே இதை நீ பொருளில் பற்றுள்ளவர்களிடம் கொண்டுபோய்க் கொடு '' எனக் கூறினார். அதைக் கேட்ட மன்னனிற்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது. உடனடியாகத் திரும்பி தனது தேரில் ஏறித் தேரை அரண்மனைக்குச் செலுத்தும்படி ஏவினான்.

அரண்மனையை வந்தடைந்த அரசன் தனது சிம்மாசனத்தில் அமர்வதும் எழுந்து அங்கும் இங்கும் நடப்பவனாகக் காணப்பட்டான். ''என்ன தைரியம் நான் கொடுத்த பொருளை வேண்டாமென்பதா ? '' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான். நடந்ததைக் கேள்விப்பட்ட அமைச்சர் பேசாதிருந்தார்.

''என்ன அமைச்சரே தக்க தருணத்தில் ஊமையாகிவிட்டீர் ? அவனைத் தண்டிக்க ஏதாவது ஒரு வழி கூறும் ?'' என்றார். ''மன்னா அவனைத் தண்டிப்பதை விட இப்படிச்செய்தால் என்ன ? உங்களைப் புகழ்ந்து ஒரு பாட்டுப் பாடும்படிக் கூறுங்களேன்?'' என்றார்.

'' இதுவும் நல்ல யோசனைதான். யாரங்கே பத்மநாதனை நான் வரச் சொன்னதாக அழைத்து வாருங்கள் '' என ஒரு காவலாளிக்கு கட்டளையிட்டான்.

காவலாளி பத்மநாதனின் வீட்டை அடைந்து மன்னர் அழைத்து வரும்படிக்கூறினார் என பணிவுடன் கூறினான் .''

அதைக் கேட்ட பத்மநாதன் கோபமுற்று '' நாமார்க்கும் குடியல்வோம் நான் வருவதற்கில்லை இதைச் சென்று உன் மன்னனிடம் கூறு என்றார். வேறு வழியின்றி காவலாளி திரும்பிச் சென்றான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த பத்மநாதனின் மனைவி ''கூப்பிட்டுத்தானே அனுப்பியிருக்கிறார். நீங்கள் அங்கே சென்று பார்த்திருக்கலாமே '' என்றாள். அதைக் கேட்ட பத்மநாதன் ''நீயுமா என்னைப் புரிந்துகொள்ளவில்லை எனக்கு என்றும் இறைவன் துணையிருப்பான். நான் அரசனது கட்டளையை ஏற்றுச் செல்வேனாகில் நான் இறைவன் மீது வைத்த அன்பு என்னாவது '' என்றார். அதைக் கேட்ட மனைவி அமைதியுற்றாள்.

காவலாளியின் பதிலைக் கேள்வியுற்ற மன்னன் கோபமுற்று '' அவனை இழுத்து வாருங்கள் '' என ஆணையிட்டான். பத்மநாதன் அரண்மனைக்கு இழுத்து வரப்பட்டான். ''அரசனின் ஆணையை ஏற்காதோருக்கு என்ன தண்டனை தெரியுமா ? '' என கேட்டான். அதற்கு பத்மநாதன் சற்றும் பயப்படாது '' தெரியும் மரணதண்டனை'' என்றார். அதை கேட்டு ஆவேசமுற்ற மன்னன் '' இவனை இழுத்துச் சென்று இப்பொழுதே கழு மரத்தில் ஏற்றுங்கள்'' என ஆணையிட்டார். அவரை இழுத்துச் சென்று கழுமரத்தில் ஏற்றினார்கள். ஆனால் அக்கயிறு அறுந்து மாலையாக அவர் கழுத்தில் விழுந்தது. அப்பொழுது தான் மன்னன் அடியார்களின் பெருமையை உணர்ந்தான். தன்னை மன்னிக்கும்படி அவர்காலில் விழுந்து கெஞ்சினான். அதற்கு பத்மநாதன் ''மன்னிப்பதற்கு நான் யார். இறைவன்தான் மன்னிப்பதற்கு ஏற்றவர். அவரிடம் சென்று உங்கள் பிழைகளைச் சொல்லி அழுங்கள் அவன் மன்னித்து விடுவான்'' என்றார். அப்பொழுதே மன்னன் தனது முடியைத் துறந்து இறைவனிற்கு தொண்டு செய்யத் தொடங்கினார்.

**வித்யா விமலநாதன்**

**மெதடிஸ்ட் கல்லூரி.**

*With Best Compliments From*

## M.S. ACCOUNTING SYSTEMS

**Y.M.B.A. BUILDING,**
**COLOMBO - 01.**

*With Best Compliments From*

## CEY - CAN

**TRAVEL & TOURS (PVT) LTD.**

**2ND FLOOR, 113, CHATHAM STREET, COLOMBO 1.**
**SRI LANKA. TLX: 22501 CEYCAN CE**
**TEL : 325336, 439952, 437647, 343571 - 3**
**FAX: 440294, 436006**

*With Best Compliments From*

# MEDIQUICK (PVT)LTD.

*With Best Compliments From*

# MOVIELAND

*Tamil ,English & Hindi movies Sales & Rental*

**315, Galle Road, Wellawatte,**
**Colombo - 06.**
**Phone : 508353**
**Head Office : 104, Bankshall Street,**
**Colombo-11.**
**Phone : 541142, 447483**

*With Best Compliments From*

# LANKA ASIATIC CORPORATION (PVT.) LTD.

GENERAL MERCHANTS, COMMISSION AGENTS &
DEALERS IN CEYLON PRODUCE

**32, Old Moor Street,**
**Colombo - 12.**
**Tel: 432473, 334360**
**Fax: 432473**

*With Best Compliments From*

# CENTRAL AGENCY

Importers, Government & Corporation Suppliers
Dealers in Hardware & Sanitaryware

22, Quarry Road, Colombo - 12.
Tel : 327870, 432450 Fax : 336735

**Show Room :**

2- 59 - 1st Floor, Majestic City,
No. 10, Station Road, Colombo - 4.
Tel : 595728

*With Best Compliments From*

# SRI MAITHILY

## Jewellers

153, A, Sea Street,
Colombo-11.

Tel(O) : 434490, 449400
Tel(R) : 582268
Fax : 434488

*With Best Compliments From*

# THE ROYAL FANCY HOUSE

Dealers in Fancy Goods,
Toys, Eversilver Bare Wear Gifts
Specialists in All Bridal & Dance Ornaments

221, Galle Road, Wellawatte, Colombo - 06.
Phone : 074 - 510304

*With Best Compliments From*

# GAYTHANA.

JEWELLERS & PAWN BROKERS

202, Sea Street, Colombo - 11.
Tel : 437984, 438708

*With Best Compliments From*

## OVERSEAS AUTOMOTIVE PVT. LTD.

No. 368/5, Sri Sangaraja Mawatha, Colombo-10.
Tel : 335012, 338492, 422606
Fax : 074-610782

*WITH BEST COMPLIMENTS FROM*

# T.M.B. ENTERPRISE

**No. 18, 4th Cross Street,**
**Colombo -11.**

WITH BEST COMPLIMENTS FROM

# SANTHOSA TRADE CENTRE.

**Dealers in :**

Ever- Silver Enamel, Aluminium, Glass Ware,
Fancy Goods, Paper & Stationery Items.

Residence:
No. 18, St. Kildas Lane,
Colombo - 3.
Tel : 589444

45, Prince Street,
Colombo - 11.
Tel : 329787, 441635

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றைய தலைமுறையின் பங்களிப்பு

எங்கும் புதுமை எதிலும் புதுமை என்ற இன்றைய நவீன யுகத்தில் வெறும் சடங்காகவும். திருவிழாவாகவும். சீர் குலைந்து கொண்டு வருகிறது சமயம். முதலில் சமயம் என்றால் என்ன என்பதை நோக்கினால். ஒரு பாதை அல்லது நெறி என்றே கூறலாம். அதாவது நல்ல வழி காட்டும். இறைவனை அடையும் ஒரு மார்க்கமாகும்.

எல்லாச்சமயங்களும் பிற உயிர்களிடத்தே அன்பாய் நடவென்றும் இரக்கம் காட்டென்றும். நல்ல குணங்களை வளர்த்துக் கொள் என்று கூறி வருகிறது. ஆனால் இன்றோ வெறும் சுயநலமாக இச்சமுதாயம் தன்னை வளர்த்து கொண்டு வருகிறது. சமுதாயத்தில் மிகவும் முக்கியமானவர்களாக கருதப்படுபவர் இளைஞர்கள் அதாவத இளைய தலைமுறையினர். உலகில் பெருமளவில் எண்ணிக்கையில் காணப்படுபவர்களும் இவர்களே.

முதலில் இன்றைய தலைமுறையினரின் நிலையை நோக்கினால் இருபதாம் நூற்றாண்டில் வாழ்வதா, பண்டைய கலாச்சாரங்களை மறப்பதா, இருபத்தோறாம் நுற்றாண்டிற்கு தம்மை தயார் செய்வதா என்ற கேள்விகுறியுடன் காணப்படுகிறார்கள். தமது கல்வி. எதிர்காலம் என்று சிந்திக்கும் இவர்களிற்கு சமயம் என்பது ஒரு பிரச்சினையே இல்லை. இவ்வாறான நிலை ஒரு புறமிருக்க, இன்று ஆலயங்களில் அங்கபிரதிஷ்டம் செய்யும் இளைஞர்களும், அடிஎடுக்கும் பெண்களும், விரதம் பிடிப்பவர்களும், இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களின் அடிமனதில் இறைவனிற்கு ஒரு சன்மானத்தை கொடுப்பது போன்று, ஒரு பணியை செய்தால் இறைவன் அதற்கு பதிலாக நல்லவற்றை தருவான் என்ற எண்ணம் ஊறிவிட்டது. நான் வெளிநாடு செல்ல வழிசெய்தால் ஐம்பது தேங்காய் உடைப்பேன் என்றும், பரீட்சையில் நல்ல சித்தி பெறச் செய்தால் உண்டியலில் நூறு ரூபா போடுவேன் என்றும் ஒரு கொடுக்கல் வாங்கல் நிகழ்த்தும் வியாபாரமையமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த சமயத்தின் ஆலயங்களிலும் அமைதிபேணப்படுவது மிகவும் முக்கியமாகும். ''கோயிலில் இறைவன் நாமத்தை உச்சரிப்பது அன்றி பிறவார்த்தை பேசலாகாது'' என்று அருமையான வாசகம் நல்லூர் கோயிலின் மண்டப வாயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. சமயமானது புற, அக என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அகச்சமயமானது சமயத்தின் உள்ளீடு அல்லது கருப் பொருளாகும். புறச்சமயமானது திருவிழாக்கள். சடங்குகள் என்பவை. இன்று எல்லோராலும் புறச்சமயமே கைக்கொள்ளப்படுகின்றது.

ஆலயங்களில் பெரிய செல்வந்தர்கள் தம்பெயரில் நன்கொடைகள், அன்னதானங்கள் செய்வதுடன் மட்டுமன்றி, இறைவனிற்கு கொடுக்கும் பொருட்களிற்கு தம் பெயர்களை பொறித்து கொடுக்கிறார்கள். ஆலயங்களை ஒரு விளம்பரதாபனமாக மாற்றுகிறார்கள்.

இளமை உடலில் இருக்கும் போதே இயன்றவரை செய்து முடி என்பதற்கு இணங்க ஒவ்வொரு இளைஞனும் செயற்பட வேண்டும். முதலில் சமயத்தின் பெருமைகளை அறிய வேண்டும். இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதே இன்று எல்லோராலும் மறக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இரவும் பகலும் மாறி மாறி உண்டாகும் இக் காலச்சக்கரத்தில், இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்களாவார்.

''வாழ்வொன்று வாழவேண்டும், மற்றவரை வதையாது வாழவேண்டும்'' என்ற நல்ல இலட்சியத்துடன் தமது சமயத்தை முன்னேற்றுவதில் பங்கெடுக்க வேண்டும். ''நான் உடலல்ல, நான் பலமல்ல, நான் மனமல்ல, நான் ஆன்மாவே'' என்று உணரும் பொழுது. இவ்வுடல் வெறும் மாயையே என்ற எண்ணம் மனதில் உதிக்கும். அறிவியலிற்கும், ஆன்மாவிற்கும் இடையில் நின்று தடுமாறலாகாது. அறிவியலால் அடைய முடியாத இன்பத்தை இறைவழிபாட்டால் அடையலாம். உதாரணமாக றோபோக்களும் விண்வெளி ஆராய்சிகளும், அணுப்பரிசோதனைகளும் உயர்ந்த நிலையில் இருக்கும் இக்கால கட்டத்தில் யுத்தம், இனப்பிரச்சினை, வல்லரசு நாடுகளின் அடக்கு முறைமை, எய்ட்ஸ், வெள்ளம், என்றே அழிவுகளை அடுக்கிக் கோண்டே போகலாம்.

ஆகவே அறிவியலும், இறை வழிபாடும் கை கோத்துச் செல்லும் போதே நல்ல பயனை இப்பாரிய உலகம் பெறும். ஒரு சமயமானது வளர முதலில், சமயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். சமயம் வேறு ஆத்மீகம் வேறு என்று எண்ணலாகாது. அதன் கோட்பாடுகளின் படி ஒழுக வேண்டும். ஒரு கிறிஸ்தவன் ஒரு தேவாலயத்திற்குள் உள்ளடக்கப்படுவான், ஒவ்வொருவனும் தமத சமய நெறிகளை அறிய வேண்டும்.

பொய் பேசலாகாது, கயமை புலால் உண்ணுதல், அழுக்காறு , விபச்சாரம் போன்றவை செய்யக்கூடாதவை என்று நாவலர் பெருமார் கூறியுள்ளார். எவற்றை செய்யக்கூடாதோ அவற்றை விடுத்து, எவற்றை செய்ய வேண்டுமோ அவற்றை கொண்டுள்ளது சமயம். திருமூலர் திருமந்திர்த்தில் ஒருவன் செய்ய வேண்டியதை கூறியுள்ளார். இறைவனிற்கு பூக்களை பொடுங்கள், நாம் உண்ணும் போது அடுத்தவரிற்கு ஒரு பிடி உண்ண கொடுங்கள், நாம் பெறுவதை பிறரிற்கும் வழங்கமுற்படுங்கள், எந்நேரமும் இன்முகத்துடன் இருங்கள்'' இதுவே அவர்காட்டும் நெறி. இராமலிங்கம் அடிகள் இதற்கு மேல் ஒரு படி சென்று '' ஒவ்வோரு வாடிய பயிரகை காணும் போதும் நான் வாடுகிறேன்'' என்றார் .

முதலில் புறச்சுத்தத்தை பேணும் போது அகச்சுத்தம் தானே வரும். ஓவ்வோரு இளைஞனும் தம்மத வழிபாட்டு தலங்களை சுத்தமாக வைத்திருக்க முயல வேண்டும். பூமாலை கட்டுதல், தொண்டு செய்தல், திருவிழாக்களில் உதவுதல், கோயிலிற்கு நீர் இறைத்தல், தன்னை தானே சுத்தமாக வைத்திருத்தல் என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.

''அரித அரிது மானிடராகப் பிறத்தலரிது'' என்று கூற்றிற்கிணங்க இவ்வரிய பிறப்பை பயனுள்ளதாக்க வேண்டும். பிறப்பது நல்ல வாழ்க்கை வாழ்வதற்கும், நல்ல பயனைப் பெறுவதும் பிறரை வாழவைப்பதற்குமே ஆகும். உடம்பு எடுத்தலே இறைவனை அடையவே என்பதை ஒவ்வொரு இளைஞனும் அறிய வேண்டும்.

இளைஞர்கள் தம் தோளில் சுமக்கப்பட்டுள்ள பொறுப்பினை அறிய வேண்டும். சமயத்தை விளங்க வேண்டும். மத உணர்வை இயல்பை அறிந்து அதன்படி நடத்தலே உத்தமம்.

''வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல '' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க பிறரிற்கு தீமை செய்யாது வாழ வேண்டும். இயேசு கிறிஸ்துவோ, நபிகளோ, இந்துசமயமோ, சாதி மதம் பார்க்காது வாழ வேண்டும்.

எமக்குள்ளே இறைவன் இருக்கின்றான் இதையே யோகர் சுவாமிகள் '' தேடி கண்டேன் எனக்குள் விஸ்வநாதனை'' என்றார். நாம் நல்லவற்றை பார்த்து, நல்லவற்றை கேட்டு, நல்லவற்றை பேசி உலகை வழி நடத்த வேண்டும். சமய சம்பிரதாயங்களை கேலிபேசல், பிற மதங்களை அவமதித்தல், பெரியோரை நிந்தித்தல் என்பவற்றை செய்யலாகாது.

பெரியோர்களால் சீராக்கப்பட்ட இறைவனால் அருளப்பட்ட சமயத்தை மேம்படுத்தல் ஒவ்வொரு இளைஞனினும் கடமையாகும். நவீன நாகரீகத்தில் நினைத்தாலும் ஈற்றில் அமைதி அடைய சமயம் வேண்டும். சமயம்தான் சமாதானம். நல்ல பணியை சமயதிற்கு ஆற்றுவோம்.

''புதியதோர் உலகம் செய்வோம் ''

சிவரம்யா சிவநாதன்
**மெதடிஸ்ட் கல்லூரி.**

✍ எக் கருமத்தைச் செய்யும்பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மன மகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகி வந்தால் மன உறுதி உண்டாகும். அதாவது மனம், ஏகாக்கிரக சித்தத்தைப் பொருந்தும், பொருந்தவே ஆத்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்தில் உண்டாகும்.

✍ உறுதியுடனே சிங்கம் கானகத்தில் திரிவதுபோல் உலகமாகிய கானகத்தில் திரி. எந்த விதத்திலும் தளர்வடையாதே. ஒரு நூதனமுமிங்கில்லை. முழுதுமுண்மை. ஒரு பொல்லாப்புமில்லை.

✍ ஓ மனிதனே ! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீ யாரெனத் தெரிந்து கொள்வாய். துயருறத்தகாத காரியங்களில் துயருறாதே. துன்பமும் இன்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள் உன்னை ஒன்றுந் தாக்கமாட்டாது. எழுந்திரு, விழித்துக்கொள். சிவத்தியானமென்னும் திறவுகோலால் மோட்ஷ வீட்டின் கதவைத்திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

*–யோகர் சுவாமிகள்–*

# நன்றி நவிலல்

பிரதம அதிதியாக பெருமனதுடன் எமதழைப்பை ஏற்று வருகை தந்த இந்து சமய கலாசார திணைக்கள பணிப்பாளராகிய திரு. எஸ். தில்லைநடராஜா அவர்களிற்கும்...

கலைவாணிக்கு முத்தமிழால் முடிசூட்ட நிறைந்த மனதுடன் அனுமதியும், வாழ்த்துக்களும் வழங்கிய எம் அதிபர் திரு. H.L.B. கோமஸ் அவர்களிற்கும்...

எம் கல்லூரி உதவி அதிபரிற்கும்...

பல சிரமங்களின் மத்தியில் எமது ஊக்கம் குன்றாது நாம் செய்த கடமையை கண்ணியமாய் நிறைவேற்றிட கருத்துடன் வழி நடத்திய மன்ற பொறுப்பாசிரியர் திருமதி.புஷ்பா நீலலோஜனன் அவர்களிற்கும்...

எம் மன்ற வளர்ச்சிக்கு தூண்களாக நின்று உதவிய தமிழ் இலக்கிய, நாடக, கர்நாடக இசை மன்ற பொறுப்பாசிரியர்களிற்கும் மற்றும் மாணவ தோழரிற்கும்.

பாடசாலைமட்டத்திலான, பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவர்களாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கும், மற்றும் ஏனைய ஆசிரியர்கட்கும்.

எமது பாடசாலைக்கிடையேயான போட்டிகளிற்கு கலந்து சிறப்பித்த மாணவர், வேற்று பாடசாலை மாணவ மாணவிகளிற்கும்...

இம்மலரிற்கு இல்லை என இயம்பாது இயன்றவரை விளம்பரத்தை அள்ளிதந்த விளம்பரதாரர்களிற்கும்.

வேத்தியர் விழாக்காண களிப்புடன் எமதழைப்பை ஏற்று வந்தெய்திய சகோதர பாடசாலை மாணவ மாணவிகளுக்கும்,...

விழாவிற்கு ஒலி, ஒளி மூலம் உயிர் கொடுத்த PERAKUM RADIO நிறுவனதாரிற்கும்...

குறைந்த காலத்தில் எமது விருப்பப்படி நிறைவாக மலரை அச்சிட்டுதந்த CVR Graphic Art நிறுவனத்தாரிற்கும்...

இனிக்கும் இன்ப மாலைபொழுதினிலே எமது மாணவர் கலைத்திறன்களை கண்டு களிக்க வந்த ரசிகப் பெருமக்கற்கும்...

எமக்காக தங்கள் நேரத்தை ஒதுக்கி , தோளோடு தோள்நின்று ஊனுறக்கம் பாராதுழைத்த பழைய மாணவர்களுக்கும், மற்றும் மாணவ தோழரிற்கும்...

குறிப்பறிந்து உதவிகள் பல நல்கிய நாம் குறிப்பிட மறந்த அனைவரிற்கும்...

"நவில்கின்றோம் நன்றிகள் பல்கோடி"

செயற்குழு
இந்து மாணவர் மன்றம்

*With Best Compliments From*

# SABA IMPEX

**Importers, Exporters, Agents & Representatives**

64-2/20, Dam Street,
Colombo - 12,
Sri Lanka.

☎ **325860, 330093, 431390**

**Fax : 439603**

றோயல் கல்லூரி, கொழும்பு - 07

# இந்து மாணவர் மன்றம்

# Royal College Colombo-07 Hindu Students Union

1998-1999

President
Mr. H. L. B. Gomes
(Principal - Royal College)

Student Chairman
T. Sudarshan

Asst. Student Chairman
T. Sarvana

Secretary
R. Anandan

Treasurer
R. Pranavan

Asst. Treasurer
K. Mayuran

Asst. Secretary
B. Vasantha Krishnan

Editor
R. Bramma Vinayagan

Sub Editor
N. Arul Prasanth
S. Kirubananthan
R. Rathisan

Committee Members
K. Ravi Shanker
S. Rajiv prasanna
L. Gopikanthan
T. M. Shaphiq
U. L. A. Saffan
S. Senthuran
M. S. M. Shiraz
M. Srirangan
M. Sanjeeharan
N. Dhanesh

Teacher in Charge
Mrs. P. Neelaloganan




"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

CR GRAPHIC ARTS BLG 7, GUNASINGHEPURA, COL-12. TEL: 439677